பக்கங்கள்: 24

**இனி இது ரகசியம் அல்ல!**

அதிகாரம் கைக்கு வரும்போது எதேச்சாதிகாரம் எல்லை மீறுவது தவிர்க்க முடியாத விடயமாகின்றது. நமது நாட்டிலே ஒவ்வொரு விவகாரத்துக்கும் நீதிமன்றுக்குப் போய்த்தான் நிவாரணம் – நீதி – நியாயம் பெறவேண்டும் என்ற இக்கட்டு. பக்கம் 02

காலைக்கதிர்
Kalaikathir
விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 24 வியாழக்கிழமை 09.01.2020 கதிர் 65

# 13 ஆவது அரசமைப்பு திருத்தம் குறித்து இந்தியா இராஜதந்திர ரீதியில் அணுகும்

## வடக்கு மாகாண அவைத் தலைவர் சிவஞானம் நம்பிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 09

13 ஆவது அரசமைப்பு திருத்தம் தொடர்பில் இந்தியா இராஜதந்திர ரீதியில் தனது அணுகு முறையைக் கையாளும் என்ற தெளிவான நம்பிக்கை எனக்கும் எங்களுக்கும் இருக்கிறது. – இப்படிக் கூறியிருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம். பக்கம் 02

# அதிகார பகிர்வால்தான் அபிவிருத்தி சாத்தியம்!

## சபையில் சம்பந்தன் எடுத்துரைப்பு

கொழும்பு,ஜனவரி 09

அதிகாரப் பகிர்வுத் தொடர்பில் சிந்தித்துச் சரியான நடவடிக்கைகளை எடுத்தால் மட்டுமே நாட்டின் அபிவிருத்தி சாத்தியம் என நாடாளுமன்றத்தில் நேற்றுச் சுட்டி காட்டியுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அபிவிருத்தியில் தமிழ் மக்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் அவர்களின் நியாயமான அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தினார். பக்கம் 03

## தேசிய கீதம் தமிழிலும்!

### டக்ளஸ் சபையில் உறுதி



கொழும்பு, ஜன. 09

தேசிய கீதம் தமிழிலும் பாடப்படுமேயன்றி எந்தச் சந்தர்ப்பத்திலும் அதில் மாற்றம் ஏற்படப்போவதில்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன் என கடற்றொழில் மற்றும் நீரியல் வள மூலக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். பக்கம் 03

## மன்னார் பிரதேச செயலராக மனோகரன் பிரதீப் நியமனம்

கிளிநொச்சி, ஜன. 09

கிளிநொச்சி கண்டாவளை உதவிப் பிரதேச செயலராக கடைமையாற்றிய மனோகரன் பிரதீப், மன்னார் பிரதேச செயலாளராக நேற்றுப் புதன்கிழமை கடமைகளைப்பொறுப் பேற்றார்.

மாத்தளை ரத்தோட்டைபிரதேசசெயலகத்தில் இரண்டுவருடங்கள் உதவிப் பிரதேச செயலாளராகக் கடமை பக்கம் 03

## முஸ்லிம் திருமணச் சட்டத்தை ரத்துச் செய்ய தேரர் பிரேரணை

கொழும்பு, ஜன. 09

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தை நீக்குவதற்கு நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியரத்ன தேரரினால் இந்தப் பிரேரணை நேற்றுப் புதன்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது.

1951 ஆம் ஆண்டின் 13ஆம் பக்கம் 02

## வலிகாமம் கல்விப் பணிப்பாளரை எதிர்த்து நிற்கிறது ஆசிரியர் சங்கம்




யாழ்ப்பாணம், ஜன.09

வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளரின் செயற்பாடுகளால் பல்வேறு பழிவாங்கல்களுக்கு ஆசிரியர்கள் முகங்கொடுக்கின்றனர் எனத் தெரிவித்து நேற்று ஆசிரியர்கள் கவனவீர்ப்புப் பக்கம் 02

## ராஜிதவை சிறையில் அடைக்க புது முயற்சி

கொழும்பு, ஜன. 09

முன்னாள்அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்குக் கொழும்பு பிரதான நீதிவானால் வழங்கப்பட்ட பிணை உத்தரவுக்கு எதிராக, மீள் பரிசீலனை மனுவொன்று சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிணை மனுவை ரத்துச் செய்து அவரைக் கைது செய்யும் நோக்கில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பக்கம் 03

## சிங்கப்பூர் அமைச்சர் கோட்டாவுடன் பேச்சு



கொழும்பு, ஜன. 09

சிங்கப்பூர் சட்டம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் விஸ்வநாதன் சண்முகம் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவைச் சந்தித்து இருநாட்டு வர்த்தக பக்கம் 03

## ரணிலைக் கைது செய்க!

### டிலான் பெரேரா கோரிக்கை

கொழும்பு, ஜன. 09

முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவைக் கைதுசெய்து அவரிடமே மத்திய வங்கிப்பிணை முறி மோசடி தொடர்பாக விசாரணைகளை நடத்தவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல – நெலும்மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பக்கம் 02

## ரஞ்சன் ராமநாயக்க மீது ஒழுக்காற்று விசாரணை

கொழும்பு, ஜன.09

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க ஒழுக்கக் கோவையை மீறியுள்ளாரா என்பது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

விசாரணைகளின் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் 03

## 13ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுப் புதன்கிழமை நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

ஜனாதிபதி கோட்டபாய இந்தியாவுக்குச் சென்று பிரதமர் மோடியைச் சந்தித்தபோது 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துமாறு இந்தியப் பிரதமர் வலியுறுத்தினார் எனச் செய்திகள் வந்தன. அதே நேரத்தில் அங்கு வைத்தே அந்த 13 ஆவது திருத்தத்தில் உள்ள சில விடயங்களை வழங்க முடியாது என்று ஊடகங்களிடம் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்

ஆயினும் இந்த இடத்தில் இருக்கின்ற ஒரு முக்கியமான விடயம் எல்லோருக்குமே பொருந்தும். என்னைப் பொறுத்தவரை 13 ஆவது திருத்தத்தைப் பற்றிக் கதைப்பதில்லை. அதையே கோட்டபாய ராஜபக்ஷவும் சொல்லியுள்ளார். அதாவது 13 ஆவது திருத்தம் என்பது ஏற்கனவே அரசமைப்பில் உள்ள ஓர் அங்கம். ஆனபடியால் 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொண்டுதான் கதைக்கிறார்.

ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்களுக்கும் அதைச் சொல்லியுள்ளார். அந்தக் கூற்றைப் பற்றி நான் அதிகம் அலட்டிக் கொள்ள விரும்பவில்லை. அது குறித்து நாங்கள் பெரிய அளவில் அலட்டிக் கொள்ளவும் தேவையில்லை. ஏனென்றால் இப்படியான கூற்றுக்கள் கடந்த காலத்திலும் வெளிப்பட்டும்தான் இருக்கின்றன.

உதாரணத்துக்குத் தனிச் சிங்களம் என்று இயற்றப்பட்டு அது மாத்திரம் இந்த நாட்டில் ஒரே ஒரு அரச மொழி என்ற நிலைப் பாடு கொண்டு வரப்பட்ட போதும் காலப் போக்கில் மாறி இப்பொழுது இந்த அரசமைப்பில் சிங்களமும் தமிழும் இரண்டு தேசியப் பாகைள் என்று ஆகிவிட்டன. ஆனபடியால் மாற்றங்கள் நிகழும்.

அதாவது இப்போது ஜனாதிபதி இப்படிச் சொல்வதால் அது தான் இறுதி முடிவு, அது தான் இந்த நாட்டின் தலை விதி என்று நினைக்கக்கூடாது. மாற்றங்கள் நிகழும். இப்பொழுது அவர் சொல்கின்றதை அவரது கட்சி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றலாம். அந்த மாற்றங்கள் தொடர்ந்தும் நடைபெறலாம். இதில் அச்சம் கொள்வதற்கோ அவருடைய கருத்தை ஒட்டி நாங்கள் ஏமாற்றப் பட்டு விட்டோம் கருதுவதற்கோ இடமில்லை.

13 ஆவது திருத்தம்தான் எங்கள் அரசியல் தீர்வென்று நாங்கள் எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொள்ளவில்லைத்தானே. ஆனபடியால் அது எல்லாக் கட்சிகளுக்கும் பொருந்தும்தானே.

ஆனால் சில விடயங்கள் பகிரங்கமாகப் பேசப்பட முடியாதவையாக இருக்கும். இந்தியா என்ன வகையில் இதற்கான பிரதிபலிப்பைக் காட்டும் என்பதை நாங்கள் ஊகிக்க முடியாது. ஆனால் இந்தியா பிரதிபலிக்கும். பிரதிபலிக்கவேண்டிய தேவை இருக்கிறது. அது நிச்சயமாக நடக்குமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

அதற்கும் மேலாக நாங்கள் அதைப் பகிரங்கப்படுத்திப் பேசி ஒரு முரண் நிலையைத் தோற்றுவிப்பது பொருத்தமற்றது. இந்தியா அதனுடைய இராஜதந்திர முறையில் இந்த விடயத்தைத் தொடர்ந்து எடுக்குமென்ற தெளிவான நம்பிக்கை எனக்கும் எங்களுக்கும் இருக்கின்றது.

சர்வதேச தீர்மானத்தை ஒரு நாடு அவமதிப்பதைச் சர்வதேச நாடுகள் பார்த்துக் கொண்டிருக்கா.

வடக்கு மாகாண சபையில் இனவழிப்புத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்தத் தீர்மானத்தை கொண்டு வந்தமை தொடர்பில் என்னையும் குறிப்பிட்டு முன்னாள் முதலமைச்சர் சொல்லியிருப்பதை ஒரு பேட்டியில் பார்த்திருக்கிறேன். அது எனக்கு ஆத்ம திருப்தி தருகின்றது. ஏனென்றால் நான் செய்த பணி அது. முதலமைச்சரை நான் எதிராகப் பார்ப்பது இல்லை.

ஆனால் அவருடைய கொள்கைகளில் – செயற்பாடுகளில் முரண்பாடு இருக்கின்றது. ஆயினும் அவரும் மனச்சாட்சியாக அந்தத் தீர்மானத்தில் நாங்கள் செயற்பட்டமை தொடர்பில் தன்னுடைய பேட்டியொன்றில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

அந்தத் தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைத்தவன் நான்தான். அது அப்படியாகத்தான் இருக்கும். அதில் மாற்றமும் இல்லை. நாங்கள் பின்வாங்கப் போவதும் இல்லை.

இப்போது அந்தத் தீர்மானம் குறித்து இங்குள்ள அரச தரப்பினர் பல்வேறு கருத்தைச் சொல்கிறார்கள். ஆனால் அதை இன்னும் ஜனாதிபதி சொல்லவில்லை. அதாவது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தீர்மானத்தைத் தூக்கிக் குப்பையில் போடுவதாக சொல்கிறார்கள். ஆனால் ஒரு பெரிய உலக நிறுவனம் குப்பைக் கூடையில் போடுவதற்குத் தீர்மானம் இயற்றுவதில்லை. இவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே இப்படி பல கதைகளை இங்குள்ளவர்கள் கதைத்தாலும் நாங்கள் இதைப் பற்றி பெரிய அளவில் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் அது சர்வதேச தீர்மானம் என்பதால் அது தொடர்பில் சர்வதேசம் தனது செயற்பாடுகளை முன்னெடுக்கும்.

தெற்கு இனவாதத்துக்கு தீனி போடுவதாக எமது செயற்பாடுகள் அமையக்கூடாது

இந்த நாட்டில் – தற்போது தெற்கில் – முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இனவாதப் பிரசாரங்கள் ஒன்றும் புதியன அல்ல. இது காலத்திற்கு காலம் நடப்பது தான். அங்கு காலத்துக்கு காலம் பல பேர் இனவாதம் பேசுவார்கள். ஆனால் இருந்த இடம் தெரியாமல் போயிருக்கிறார்கள். இந்த விடயங்களில் முக்கிய அம்சமாக இப்போது நான் பார்ப்பது இன்றைக்குப் பிரதமராகவும் பொதுஜன பெரமுனவின் தலைவராகவும் இருக்கும் மஹிந்த ராஜபக்ஷவைத்தான். ஆனால் இந்த விடயங்களில் அவர் இன்னும் மௌனம்தான் காக்கிறார்.

அதேபோல கோட்டபாய ராஜபக்ஷவும் சிலவற்றைச் சொல்லவில்லை. ஆனால் இடையில் இருக்கிற சில்லறைகள் தான் கதைக்கிறார்கள். ஆனபடியால் நாங்கள் அவசரப்பட்டு எதிர்க் கருத்துக்களைச் சொல்லி அதுவே தெற்கத்தைய தீவிரவாதிகளுக்கு – இனவாதிகளுக்கு – மதவாதிகளுக்கு – தீனி போடுவதாக அமையக் கூடாது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எங்களுடைய செயற்பாடுகள் அவ்வாறு அமைந்ததாக விமர்சனம் இருக்கிறது. ஆகவே அந்த மாதிரியானதொரு நிலை இல்லாமல் தவிர்த்துக் கொண்டு அவர்களுக்குள்ளேயே ஓர் அரசியல் பிணக்கு ஏற்படுகின்ற வரை நாங்கள் பொறுமை காப்பதுதான் இப்பொழுது இருக்கின்ற ஒரே வழி என்று நினைக்கிறேன்.

### தமிழர் ஒற்றுமை

தமிழர் தரப்பில் ஒற்றுமை குறித்துப் பேசுகின்ற அதே நேரத்தில் பிளவுகள் அல்லது புதிய அணிகள் உருவாக்கப்பட்டு வருகின்றனதான். ஆனால் நான் எப்போதுமே சொல்கிறேன் –. இங்கிருந்துதானே எல்லோரும் போனவர்கள். இவர்களில் ஒருவராவது இங்கிருந்த போகாதவர்கள் அல்லர். நான் ஏற்கனவே சொன்னது போல தந்தை செல்வா வழியில் வந்த நாங்கள் இருக்கிறோம். பின்னர் ஆயுத வழியில் வந்தவர்களும் இருக்கிறார்கள்.அவர்கள் அனைவரும் இங்கே இருந்தவர்கள். எல்லோரும் இங்கிருந்து தான் சென்றவர்கள்.

ஆகையினால் தமிழரசுக்

பக்கம் 18 »

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாணத்தில் அப்படி நிகழ்ந்த ஒரு சம்பவத்தை விவரிக்க விரும்புகிறேன்.

கிழக்கு மாகாணத்துக்கென – மற்றைய மாகாணங்களைப் போல – தனியான பொதுச் சேவை ஆணைக்குழு உண்டு. அதன் தலைவர் பேராசிரியர் ஜெயசிங்கம். வேறு நால்வர் ஆணைக்குழு உறுப்பினர்கள். முன்னர் இருந்த ஆளுநர் ஒருவர் வழங்கிய நியமனங்கள் இது.

ஜனாதிபதியாக கோட்டாபய பதவியேற்றமையுடன் மாகாண ஆளுநர்களும் மாறினர் என்பது தெரிந்ததே. கிழக்கு மாகாணத்துக்கு வர்த்தக உலகில் பிரகாசித்த ஒரு பெண்மணி நியமிக்கப்பட்டார்.

இவர் பதவியேற்றதும் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு ஒரு கடிதம் பறந்தது. புதிய ஆளுநர் ஆணைக்குழு உறுப்பினர்களை மாற்றியமைக்க விரும்புகின்றார் என்றும், அதன் காரணமாக இருக்கும் ஆணைக்குழு உறுப்பினர்களின் இராஜினாமாக் கடிதங்களை அவர் கோருகின்றார் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்ததாம்.

அதற்குப் பதிலளித்த ஆணைக்குழு உறுப்பினர்கள் தாங்கள் ஒரு தடவை ஆணைக்குழு உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் அந்தப் பதவிக் காலம் முழுவதும் தாங்கள் உறுப்பினராக இருக்க முடியும் என்பதைத் தங்கள் பதில் கடிதத்தில் அவர்கள் ஆளுநருக்குச் சுட்டிக்காட்டினர். ஆளுநரின் விருப்புக்கு அமையச் செயலாற்றும் ஒரு பதவியல்ல இந்த மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் பதவி என்பதை ஆளுநருக்கு விளக்கிய அவர்கள், அதனால் தாங்கள் தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்யமாட்டார்கள் என்ற தகவலையும் ஆளுநருக்கு அக்கடிதத்தில் விளக்கியிருந்தனர்.

இப்படிக் கடிதத்தை எழுதி விட்டுத் தங்கள் பணியைத் தொடர்ந்தனர் அவர்கள்.

அப்படி இருக்கையில் திடீரென கருணதாஸ என்பவருக்கு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு தலைவர் பதவியை வழங்கி புதிய ஆளுநர் நியமனக் கடிதம் ஒன்றைத் தம் பாட்டில் விநியோகிக்க, அவர் அந்தக் கடிதத்துடன் போய் பொதுச் சேவை ஆணைக்குழுவின் அலுவலகத்துக்குள் புகுந்து, அதன் தலைவர் பதவிக் கதிரையிலும் அமர்ந்து விட்டார்.

ஆணைக்குழுவின் தலைவர் என்ற முறையில் பேராசிரியர் ஜெயசிங்கம் அழைப்பு விடுதிருந்த கூட்டம் ஒன்றும் நேற்று நடைபெறவிருந்தது.

இதற்கிடையில் ஆளுநரிடம் கடிதம் பெற்ற கருணதாஸ தம் பாட்டில் ஆணைக்குழுவின் தலைவராக முழு அளவில் செயற்படத் தொடங்கினர். பார்த்தார்கள் ஆணைக் குழுவின் மற்றைய நான்கு உறுப்பினர்களும். வேறு வழியில்லை. கிழக்கு மாகாண மேல் நீதிமன்றத்தில் முறையீடு செய்தனர்.

கருணதாஸ கிழக்குப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவராகச் செயற்படுவதற்கு எதிராக யாதுரிமை ஆணை கேள் மனுவை (Write of Quo Warranto) தாக்கல் செய்தனர்.

சட்டத்தரணி யார் தெரியுமா? கொழும்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுக்கு வலதுகரமாக பல வழக்குகளில் முன்னிலையாகும் சட்டத்தரணி நிரான் அங்கிட்டல்தான்.

நேற்று இந்த வழக்கு திருகோணமலையில் கிழக்கு மாகாண மேல்நீதிமன்றத்தில் நீதிபதி எம்.இளஞ்செழியன் முன்னிலையில் எடுக்கப்பட்ட போது நிரான் அங்கிட்டல் வழக்கு விடயத்தை நீதிபதிக்கு ஆதியோடு அந்தமாக – விவரமாக –விளக்கமாக – விவரித்தார். கன்னியா வெந்நீரூற்று ஆலய வழக்குத் தொடர்பான விசாரணைக்காக வந்திருந்த சுமந்திரனும் பக்கத்தில் பிரசன்னமாகியிருந்தார்.

அங்கிட்டலின் வாதத்தை செவிமடுத்த நீதிபதி, கருணதாஸ கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவராகச் செயற்படுவதற்கு இடைக்காலத் தடை விதித்தமையுடன், அந்தப் பதவியில் பேராசிரியர் ஜெயசிங்கம் தொடர்வதற்கு எந்த இடையூறும் விளைவிக்கக் கூடாது எனவும் உத்தரவிட்டு வழக்கை அடுத்த 16ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அது மட்டுமல்லாமல் நேற்றைய தினம் பேராசிரியர் ஜெயசிங்கம கூட்டியிருந்த கூட்டங்களுக்கு தலைவர் என்ற முறையில் இடையில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட கருணதாஸ தலைமை வகிப்பதைத் தடுப்பதற்காக நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குத் தாமதமின்றி உடன் தொலைபேசி மூலமும் தெரியப்படுத்தி, நீதிமன்றத்தின் உத்தரவுப் பிரதியை பக்ஸ் மூலமும் சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கவும் நீதிபதி பணித்தார்.

நான் ஆரம்பத்தில் கூறியபடி எதேச்சாதிகாரம் அத்துமீறும் போது நீதிமன்றங்கள் துணிச்சலாகவும் நீதி, நியாயமாகவும், சட்டப்படி தமக்குள்ள அதிகாரங்களைக் கையில் எடுத்தும், காலதாமதம் செய்யாமல் பிரயோகித்தால்தான் அதிகாரம் எதேச்சாதிகாரமாக எல்லை மீறாமல் கட்டுப்படுத்த முடியும்.

பக்கச்சார்பின்றியும், துணிச்சலுடன் அறிவுபூர்வமாவும் பணியாற்ற எத்தனை நீதித்துறையினர் தயாராக இருக்கின்றனர் –தங்கள் பதவியுயர்வு, சுய லாபங்கள், வரப்பிரசாதங்களை பற்றிச் சிந்திக்காமல் செயற்பட..?

– மின்னல் –

## ரணிலைக் கைது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி வழக்கின் பிரதான சந்தேகநபரான அர்ஜுன மகேந்திரன் திருமண நிகழ்வில் கலந்து கொள்வதற்குச் செல்கிறார் எனக் குறிப்பிட்டு, அவரை நாட்டிலிருந்து வெளியேற உதவியவர் ரணில் விக்கிரமசிங்கவே.

எனவே பிரதான சந்தேக நபர் இல்லாததால் அவர் வெளியேறுவதற்குக் காரணமாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவையே கைதுசெய்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த அரசால் முன்னெடுக்கப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக தற்போது சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இந் நிலையில் அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதே அரசின் பொறுப்பாகும்.

இதேவேளை, முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் குரல் பதிவுகள் தொடர்பாக அவருக்கு எதிராக மாத்திரம் நடவடிக்கை எடுக்காது, அதனுடன் தொடர்புடைய அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்–என்றார். (ஐ)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்க முஸ்லீம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தை ரத்துச் செய்வதற்கான சட்ட வரைவே ரத்ன தேரரினால் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வலிகாமம் கல்விப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நல்லூரில் உள்ள வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் உட்பட ஆசிரியர்கள் சிலர் பங்கேற்றனர்.

வலிகாமம் பணிப்பாளரை விசாரணை செய்,மோசடி இட மாற்றங்களை உடனடியாக நிறுத்து, கல்வியில் அதிகார முறைகேடுகளை நிறுத்து, வலிகாமம் கல்வி வலயத்தில் ஆசிரி–யர்களைப் பழிவாங்காதே, கடைப் பிடி கடைப்பிடி தாபன விதிக் கோவையைக் கடைப்பிடி –போன்ற கோங்களை எழுப்பி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்கள் சிலர் தமது தொழிற்சங்கத்தின் ஊடாக எல்லை மீறிச் செயற்படுவதால் தனது அதிகாரத்தின் ஊடாக அதற்கு இடமளிக்க வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் மறுப்பதே சங்கத்தின் இந்தப் போராட்டத்துக்குக் காரணம் என்று சில வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-07)

காலைக்கதிர்
Kalaikathir



## அதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியின் அக்கிராசன உரைமீதான சபை ஒத்திவைப்பு வேளை இரண்டாம் நாள் விவாதத்தில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியாது போயுள்ளது. ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கலை வழங்குவதன் ஊடாக தமிழ் மக்களின் மனங்களை ஜனாதிபதியால் வெற்றிக்கொள்ள முடியும்.

அதிகாரப் பரவலாக்கல் ஊடாகத் தமிழ் மக்களின் மனங்களை வெற்றிக்கொள்ள நடவடிக்கை எடுத்தால் நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

ஜனாதிபதி கோட்டாபய ஓர் அரசியல்வாதி அல்லர். அதனால் அவர் மனதில் பட்டவற்றை வெளிப்படையாக - உண்மையாக - பேசுகிறார். அவர் சரியானதை செய்வார் என்கிற நம்பிக்கை எமக்கு உள்ளது.

அரசமைப்பு உருவாக்கதினூடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அதற்கான தீர்வை எட்டமுடியவில்லை.

எனவே புதிய அரசாங்கம் தமிழ் மக்களுக்கு உறுதியானத் தீர்வு ஒன்றை வழங்குவது கட்டாயமாகும்.

எமது நாடு பாரிய கடன் நெருக்கடிக்குள் முகங்கொடுத்து வருகின்றது. 30வருடங்கள் யுத்தம் ஒன்றிற்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. யுத்தம் தவிர்க்கப்பட்டிருக்கலாம். அரசியல் தலைமைகள் இதனை விரும்பாத போதிலும் யுத்தம் இடம்பெற்றது. யுத்தம் இல்லாது போயிருந்தால் கடன் நெருக்கடி ஏற்பட்டிருக்காது.

கடந்த அரசாங்கங்கள் ஒருவரை ஒருவர் குற்றஞ் சுமத்திக் கொண்டிருந்தார்கள். சர்வதேசத்தின் நிலைப்பாட்டையும் அவர்கள் கண்டுக்கொள்ளவில்லை.

இலங்கையில் பல்லின மக்கள் வாழ்கிறார்கள். ஆனால் சிங்கள, பௌத்த மக்களே பெரும்பான்மையினராக இருக்கின்றார்கள் என்பதை நிராகரிக்க முடியாது.

ஏனைய மக்களின் கலாசாரம், சமூகக் கட்டமைப்பை மதிக்க வேண்டும். நீண்டகாலமாக இந்தக் கட்டமைப்பு காணப்படுகின்றது. எமக்கு எவருடனும் முரண்பட வேண்டும் என்ற நோக்கம் இல்லை. முரண்படுவதற்காக நான் இதனைச் சொல்லவுமில்லை. அனைத்து மக்களுடனும் ஒன்றுபட்ட நாட்டுக்குள் நல்லிணக்கமாக வாழ வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே எமக்கு உள்ளது.

அரசமைப்பு மிகவும் முக்கியமான சட்டமாக கருதப்படுகின்றது. அரசமைப்பு நகர்வுகளில் ஏனைய நாடுகளில் அனைத்து மக்களின் கருத்துக்கள், கொள்கைகள், உரிமைகள் என அனைத்தையும் உள்ளடக்கி அனைவரும் ஓர் இனம் என்ற அடிப்படையில் அரசமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கூறும் புதிய அரசமைப்பும் இந்த முறையில் அமைய வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் பல நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது சர்வக் கட்சிக் கூட்டத்தில் தீர்வுத் திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டது.

புதிய அரசாங்கம் மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள நிலையில் மஹிந்த ராஜபக்ஷவும் பிரதமராக உள்ளார். எனவே அவர்கள் சேர்ந்து தீர்வு ஒன்றை வழங்க முன்வர வேண்டும்.

தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் சர்வதேசத்தின் பங்களிப்பு - முக்கியத்துவம் - அவசியமானது. இந்தியாவும் சர்வதேசமும் இந்த நாட்டில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர அதிக ஆர்வம் காட்டினர். இதில் ஜனாதிபதியினதும் தற்போதைய பிரதமரினதும் பங்களிப்பு இருந்தது.

அதிகாரப் பகிர்வுத் தொடர்பில் சிந்தித்தால் மட்டுமே அபிவிருத்தி சாத்தியம். அபிவிருத்தியில் தமிழ் மக்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால், தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டும்.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு செயற்பட தயாராக இருக்கின்றனர் என்பதை ஜனாதிபதிக்கு தெரிவிக்கிறேன்.

நாட்டின் அபிவிருத்திக்காக தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து செயற்பட தயாராக இருக்கின்றனர். - என்றார் அவர்.

## மன்னார் பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றிய மனோகரன் பிரதீப், நான்கு வருடங்கள் கிளிநொச்சி கண்டாவளை உதவிப் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றினார்.

இந்த நிலையில் இலங்கை நிர்வாக சேவை அதிகாரியான மனோகரன் பிரதீப்புக்கு மன்னார் பிரதேச செயலாளராக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சால் பதவியுயர்வு வழங்கப்பட்டது. (ஐ)

## ரஞ்சன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம் கூறியுள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் சர்ச்சைக்குரிய அலைபேசி கலந்துரையாடல்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அலைபேசிக் கலந்துரையாடல்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தொலைத்தொடர்பு நிறுவனங்களிடமிருந்து அறிக்கை பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஐ)

## ராஜிதவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்ச்சைக் குரிய வெள்ளை வான் ஊடகவியலாளர் சந்திப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ராஜித அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் அவரைக் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்திருந்தது.

அத்துடன், ராஜித்த சேனாரட்னவுக்கு வெளிநாடு செல்வதற்கு நீதவான் பயணத் தடை விதித்திருந்தமையுடன், அவரது கடவுச் சீட்டை நீதிமன்றின் பொறுப்பில் வைத்திருக்கவும் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிங்கப்பூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவுகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்த அவர் நேற்று நண்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இரு நாடுகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் குறித்து இருவரும் விரிவாகக் கலந்துரையாடினர்.

முக்கியமாக வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறைகளில் இருதரப்பு உறவை மேம்படுத்துவதை இவ்வுரையாடல் மையமாகக் கொண்டிருந்தது. பயங்கரவாதத்தை எதிர்கொள்வது, இணையப் பாதுகாப்பு, தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துதல், வெளிநாட்டு அழுத்தங்கள், தலையீடுகளின் அச்சுறுத்தல்கள் மற்றும் புலனாய்வுத்துறையை மேம்படுத்துதல் உள்ளிட்ட பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

வெறுப்புப் பேச்சு, இணைய வழியாகத் தவறான தகவல்களைப் பரப்புதல் ஆகியவற்றுக்குத் தீர்வு காணுதல் மற்றும் சமய நல்லிணக்கத்தை பேணுதல் தொடர்பாக சிங்கப்பூர் அறிமுகப்படுத்தியுள்ள புதிய சட்டங்கள் குறித்தும் இருவரும் கலந்துரையாடினர்.

வர்த்தக அபிவிருத்தி, செயற்பாடு மற்றும் ஊக்குவிப்புக்கு முக்கியத்துவம் வாய்ந்த தரவு முகாமைத்துவத்தை வர்த்தகத் துறைகள் அதிகளவில் நம்பியிருக்கும் சமூக ஊடக புலனாய்வு மாதிரிகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

டிஜிற்றல் மற்றும் ஆளடையாளத் தரவுகள் (பயோமெட்ரிக்) ஆகிய இரு துறைகளையும் இணைக்கும் மறுக்கமுடியாத அடையாளமாக சிங்கப்பூர் தற்போது ஆராய்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்த சுமுகமான கலந்துரையாடலைத் தொடர்ந்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சிங்கப்பூர் அமைச்சர் சண்முகத்துக்கு ஜனாதிபதி அலுவலகத்தில் பகல் போசன விருந்தளித்தார்.

அதன் பின்னர் அமைச்சர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். (ஐ)

## தேசிய கீதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதுமட்டுமல்லாது தேசிய கீதத்தில் மாற்றத்தை கொண்டுவருவது தொடர்பில் அமைச்சரவையிலோ அன்றி அரசிலோ எந்த விதமான முடிவுகளும் எடுக்கப்படவும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைப் பிரகடன உரை தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் பேசும் மக்களின் வாக்குப்பலத்திலும், தமிழ் மக்களுக்கு மட்டற்ற வாக்குறுதிகளை அள்ளி வழங்கி அவர்களை ஏமாற்றி ஆழ்ந்த மயக்கத்தில் வைத்திருந்தோரின் முண்டு கொடுப்பிலும், கடந்த ஐந்தாண்டு காலமாக நடந்துகொண்டிருந்த நல்லாட்சி என்ற நாடகம் தமிழ் மக்களுக்கு எதையுமே பெற்றுத்தந்துவிடாமல் முடிவுக்கு வந்திருக்கிறது.

இன்று சிங்கள சகோதர மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் உருவான அரசொன்று ஆட்சிக்கு வந்திருக்கிறது.

இந்த ஆட்சி மாற்றத்தில் தமிழ் பேசும் மக்களின் பங்களிப்பு இருந்திருக்கவில்லை என்ற நிலையிலும் ஒட்டு மொத்த இலங்கைத்தீவுக்கு மட்டுமன்றி, தனக்கு வாக்களிக்காத மக்களுக்கும் தானே ஜனாதிபதியாக இருப்பேன் எனத் தனது பதவியேற்பு நிகழ்வில் உறுதியளித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தேர்தல் வெற்றியில் பங்கெடுங்கள், அதை உங்கள் வெற்றியாக்குங்கள் என்று நடந்து முடிந்த தேர்தல் காலத்தில் நான் எமது மக்களிடம் கேட்டிருந்தேன். வெல்லப்போவது கோட்டாபய ராஜபக்ஷவே என்பதை உணர்ந்து தமிழ் மக்களும் இந்தத் தேர்தல் வெற்றியில் பங்கெடுத்திருந்தால், வியத்தகு மாற்றங்களை நோக்கி தமிழ் மக்கள் வெற்றியுடன் இதுவரை முன்னேறியிருக்கலாம்.

தமது கனவுகளை வென்றெடுக்கும் பாதை நோக்கித் தமிழ் மக்கள் இன்று இலகுவாக அடியெடுத்துவைத்திருக்கலாம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியில் பங்காளிகளாகத் தமிழ் மக்களும் மாறியிருந்தால் அவரது கொள்கைப் பிரகடனத்திலும் தமிழ் மக்கள் இன்று முழுமையான பங்காளிகளாக இருந்திருப்பார்கள்.

பணப்பெட்டிகளுக்கும் தமது ஆடம்பர வாழ்வுக்கும் சோரம் போய், தாம் ஆதரிப்பவர்களை மாபெரும் மகாத்மாக்களாகச் சித்திரித்து, தமது அரசியல் புலுடாக்களுக்கு ஒத்துவராதவர்களைத் தமிழர்களின் விரோதிகளாக மக்களிடம் பொய்யுரைத்து தமிழ் தரகுக் கட்சிகள் கூட்டுச் சேர்ந்து ஆடிய நயவஞ்சகக் கூத்துக்கு தமிழ் மக்களைப் பலியாக்கும் முயற்சிகளே இன்று நடந்தேறியிருக்கின்றன.

ஆனாலும் நாம் அதற்கு ஒருபோதும் இடமளிக்கப்பதில்லை. தமது அரசியல் சூதாட்டங்களுக்குத் தமிழ் மக்களைப் பணயம் வைக்கும் சுத்த சுயலாப அரசியலுக்கு எதிராக, எமது மக்களின் பங்களிப்புடன் நாம் என்றும் உறுதியுடன் செயலாற்றுவோம்.

தேர்தல் முடிவுகள் வெளியான மறுகணத்தில் இருந்தே தமிழ் மக்கள் தாம் விட்ட தவறுகளை எண்ணி எம்முடன் மனம் விட்டு பேசி வருந்தத் தொடங்கிவிட்டார்கள்.

எமது மக்களின் இத்தகைய மனமாற்றங்கள் கடந்த காலங்களைப்போலன்றி நிரந்தரமாகவே நீடிக்கும் என்ற எனது ஆழ்மன ஊகத்தை அனுபவங்கள் எனக்கு புகட்டியிருக்கின்றன. புதிய அரசுடன் பேசி எமது மக்களின் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்கவல்ல அரசியல் பலத்தை இம்முறை எமது மக்கள் எமக்கு தர மறுத்திருந்தாலும், எதிர்வரும் காலத்தில் தமிழ் மக்கள் தமது ஆணையை எமக்கு வழங்கித் தமிழரின் கனவுகளை வெல்லும் அரசியல் பலத்தைக் காட்டுவார்கள்.

அன்றாட அவலங்களுக்குத் தீர்வுமின்றி, அபிவிருத்தியுமின்றி, அரசியல் தீர்வுமின்றி, கடந்த ஆட்சியில் அவலப்பட்டு நின்ற எமது மக்கள், இனிவரும் காலங்களில் தமது ஆதரவை யானைக்கு வழங்காமல் நாம் கேட்கும் ஆணைக்கு வழங்குவார்கள் என்பது உறுதி. ஆனாலும், அது வரை நாம் காத்திருக்கப்போவதில்லை.

இன்று எமக்கு கிடைத்திருக்கும் அமைச்சு அதிகாரம் என்பது எமது தேசிய நல்லிணக்க உறவுக்கு கிடைத்திருக்கும் அங்கீகாரம் மட்டுமே.

தமிழ் மக்களின் ஆதரவு போதிய அளவு தமக்கு கிடைத்திருக்காத போதிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், எனக்கு வழங்கியிருக்கும் இந்த அமைச்சு அதிகாரம் என்பது தமிழ் மக்களுக்கு வழங்கியிருக்கும் அங்கீகாரம் என்றே இன்று பலரும் கூறி வருகின்றார்கள்.

அதற்காக தமிழ் மக்களின் சார்பாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் எனது நன்றியைக் கூற விரும்புகிறேன்.

அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் எமக்கு வழங்கும் ஆணை கிடைக்கும் வரை, எமது தேசிய நல்லிணக்க உறவால் எனக்குக் கிடைத்த அமைச்சு அதிகாரத்தை ஒட்டு மொத்த இலங்கை மக்களுக்கு மட்டுமன்றி தமிழ் மக்களுக்காகவும் நான் சிறந்த முறையில் செயற்படுத்திக் காட்டுவேன்.

காணாமற்போனவர்களின் உறவுகளின் கண்ணீருக்குப் பரிகாரம் தேட நான் அமைச்சரவையில் அங்கீகாரம் பெற்றது போல், இன்னும் முடிந்தளவு எமது மக்களின் பிரச்சினைகள் குறித்தும் அமைச்சரவை அங்கீகாரத்திற்குக் கொண்டுவர எண்ணியுள்ளேன். தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன என்றவுடன் தமிழ் மக்களுக்கு ஆனந்தக் கொண்டாட்டம். ஆனாலும், இங்கு சிலருக்கு திண்டாட்டம்.

தமிழ் மக்களின் அவலங்களை வைத்து அரசியல் பிழைப்பு நடத்தும் தரகுத் தமிழ்க் கட்சிகளுக்கு பிரச்சினைகள் தீர்வதில் விருப்பமில்லை. கடந்த ஆட்சியில் போதிய அரசியல் பலத்துடன் இருந்தும் அந்த ஆட்சிக்கு முண்டு கொடுத்து நின்றவர்கள், புத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குவது தமக்கு ஆட்சேபனை இல்லை என்றார்கள். இன்று வந்து சாத்தான்கள் வேதம் ஓதுவது போல் ஏதோ பிதற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

சிங்களமும் தமிழும் சமவுரிமை என்ற தமிழரின் கனவுகளை போதிய அரசியல் பலமிருந்தும் சாதித்து காட்டாதவர்கள், சிங்கப்பூரை உதாரணம் காட்டி சமவுரிமை குறித்து இந்தச் சபையில் பேசி அரசியல் சித்து விளையாட்டு காட்டுகிறார்கள்.

அதுமட்டுமல்லாது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேச்சுக்கே இடமில்லை என்று கூறியவர்கள் இன்று அவரிடம் சென்று கூனிக் குறுகித் தமக்கு ஊடாகத்தான் தமிழ் மக்களிடம் செல்லவேண்டும் என்று கோரிக்கை விடுகின்றார்கள்.

மண்குதிரையை நம்பி ஆற்றிலிறங்க முடியுமா? 100 பேர் கொண்ட துரியோதனன், துச்சாதனன் கூட்டத்தை விடவும் ஐந்து பேரைக் கொண்ட பாண்டவர் சேனையே உறுதியானதும் இறுதியானதுமான வெற்றிக்குரியதுன் என்பது வரலாறு.

இந்த நாட்டில் வாழும் தேசிய இனங்களில் ஒன்றான தமிழ் தேசிய இனத்தின் கனவுகளை வெல்லவே நான் சமாதானப் புறாக்களைக் கையிலேந்தி வந்திருக்கிறேன். தமிழ் மக்களின் தேசிய நல்லிணக்க அடையாளமாகவே நான் இந்த ஆட்சியில் அமைச்சு அதிகாரத்தில் பங்கெடுத்து வருகின்றேன்.

தமிழ் மக்களின் பெயரால் அரசியல் பிழைப்பு நடத்தும் சுயலாப தமிழ் கட்சிகளின் தவறான வழி நடத்தலை எண்ணி தமிழ் மக்களை இந்த அரசு ஒரு போதும் வஞ்சித்து விடாது என்றே நான் நம்புகிறேன்-என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## ஜனநாயகக் கேலிக் கூத்து

புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது அரசின் கொள்கை விளக்கவுரையை கடந்த 3 ஆம் திகதி புதிய நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்தபோது ஆற்றியிருந்தார். அதனை ஒட்டித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை பிரதிபலித்து கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்றுமுன்தினம் ஆற்றிய உரை சிலாகிக்கத்தக்க பல விடயங்களைக் கொண்டிருக்கின்றது.

தனித்து பௌத்த, சிங்க வாக்குகளை மட்டுமே நம்பி பதின்மூன்று லட்சத்துக்கும் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று கோட்டாபய ஈட்டிய வெற்றி யாவராலும் பெரிய விடயமாகப் பேசப்படுகின்றது.

ஆனால், அதனை உயர்வு நவிழ்ச்சிப் பாணியில் விமர்சித்திருக்கின்றார் சுமந்திரன்.

*"ஒரு நாட்டின் செல்வாக்கு மிக்க தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்விலே அவரது சொந்த மக்கள் அவரில் நம்பிக்கை வைக்கின்றார்களா என்பது முக்கியமானது அல்ல, மாறாக, ஏனைய மக்கள் அவரில் நம்பிக்கை வைக்கத் தயாராக உள்ளார்களா என்பதே முக்கியமாகும். துரதிஷ்டவசமதாக இது இங்கு தேடப்படுகின்ற ஒன்றாகவே காணப்படுகின்றது."* என்று கூறியிருக்கின்றார் சுமந்திரன்.

நீங்கள் உங்களின் சொந்த சிங்கள, பௌத்த மக்களை இனவாத அடிப்படையில் உணர்ச்சியை ஏற்றிவிட்டு, பேரினவாதத் தீயைக் கிளப்பி, அதில் குளிர்காய்ந்து, வாக்கு அறுவடையை ஈட்டுவதில் பெருமை எதுவுமில்லை என்பது சுமந்திரன் சுட்டிக்காட்டும் அடிப்படை விடயம் ஆகும்.

இதையும் தாண்டி இந்தக் கருத்துக்குள் பூடகமாக – அச்சிலோ, வார்த்தைகளிலோ இடம்பெறாமல் – தொக்கி நிற்கும் இன்னொரு விடயமும் உண்டு.

*"இந்தத் தேர்தலில் அவரது சொந்த மக்கள் அவரில் நம்பிக்கை வைத்தமை"* குறித்தும் –

*"மாறாக, ஏனைய மக்கள் அவரில் நம்பிக்கை வைக்காதமை"* குறித்தும் –

விவரிக்கின்றார் சுமந்திரன். அதாவது, இரண்டு மக்கள் கூட்டத்தை (Peoples) அவர் குறிப்பிடுகின்றார்.

ஒன்று – கோட்டாபயவின் சொந்த மக்கள்.

மற்றையது – ஏனைய மக்கள்.

அதாவது, ஜனாதிபதி கோட்டாபயவின் சொந்த மக்கள் அல்லாத ஓர் 'ஏனைய மக்கள் கூட்டம்' இந்தத் தீவில் உள்ளனர் என்பதை சுமந்திரன் சொல்லாமல் சொல்லியிருக்கின்றார்.

இன்னும் கொஞ்சம் விளக்கமாக – விவரமாக – குறிப்பிடுவதனால், இந்த இலங்கைத் தீவில் ஜனாதிபதி கோட்டாபயவின் சொந்த மக்கள் எந்த ஒரு தேசிய மக்கள் கூட்டமும், 'ஏனைய மக்கள்' என்ற பிறிதொரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய மக்கள் கூட்டங்களும் உள்ளன என்பதையே தமது நாடாளுமன்ற உரையில் தமது சொல்லாடல்களில் வெளிப்படுத்த முனைகின்றார் சுமந்திரன் எம்.பி.

பௌத்த, சிங்கள தேசியத்தினால் நாட்டில் ஏகோபித்த தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கோட்டாபய தமிழ்த் தேசிய மக்கள் கூட்டத்தினராலும் மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய இனக் குழுமத்தினராலும் ஒட்டு மொத்தமாக நிராகரிக்கப்பட்டவர் என்பதை மென்மையான சொல்லாடல்களில் – ஆனால் கடுமையான கருத்துக் செறிவில் – முன்வைத்திருக்கின்றார் சுமந்திரன்.

சமத்துவ நிலை என்பது வெறும் அட்சர கணித எண்ணிக்கையில் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதில்லை; அப்படித் தீர்மானிக்கவும் முடியாது.

துரதிஷ்டவசமாக அப்படி அட்சரகணித எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்மானிப்பதே நீதியும், நியாயமும், சட்டச் செல்லுபடி வாய்ந்ததும் என்ற கருத்து நிலைப்பாடு ஆழமாக நமது செயல் விடயங்களில் ஊன்றிப் பதித்து விட்டமையே இப்போதைய இழிநிலைக்குக் காரணமாகும்.

பெரும்பான்மை வாதம் என்ற மேலாண்மைச் செருக்கு– மேலாதிக்கத் திமிர் – ஊற்றெடுப்பதும் கூட இந்த எண்ணிக்கை அடிப்படையிலான அட்சர கணிதப் பண்பியல்பு முறைமையினாலாகும்.

சர்ச்சைக்குரிய விடயங்களில் தீர்மானம்– தீர்வு – அல்லது தீர்ப்பு – வெறும் அட்சர கணித எண்ணிக்கையின் அடிப்படையில் முடிவு செய்யப்படுவதாக இருக்கக் கூடாது.

அதையும் தாண்டு நீதி, நியாயம், சமூக ஒழுங்கு, அகப்புற சூழல்களின் நிலைமை போன்றவற்றின் அடிப்படையில் – அவற்றிற்கு ஏற்ப – எடுக்கப்படுகின்றவையாக இருக்க வேண்டும்.

சுமந்திரன் எம்.பி. சுட்டிக் காட்டுகின்றமை போல துரதிஷ்டவசமாக அதுதான் நம் இலங்கை நாட்டில் இல்லை.

எண்ணிக்கையில் அதிகமானோரின் முடிவே நீதியான தீர்மானம் என்பது ஜனநாயகத்தின் கேலிக் கூத்தான பண்பியல்பு.

அந்த முகத்தைத்தான் பெரும்பான்மை வாதமாக சிலாகித்து முன் நிறுத்துகின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அந்தப் பெரும்பான்மைவாதமே இலங்கைத் தீவில் பௌத்த, சிங்களப் பேரினவாதமாகவும் உள்ளது. அதுவே இந்தத் தீவின் துரதிஷ்டம். அதைப் பீடித்த பீடையும் கூட.

# அரசு கூறுவதை நம்ப முடியாது!

## சரத் பொன்சேகா தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 09

சுவிஸ் தூதரக பெண் ஊழியர் கடத்தப்படவில்லை என அரசு கூறுவது உண்மையென இன்னமும் நம்ப முடியாதுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த நாட்டில் மீண்டும் வெள்ளை வான் கலாசாரம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரியின் கடத்தல் விடயத்தில் வெள்ளை வான் கடத்தல் இடம்பெறவில்லை, அவர் அச்சுறுத்தப்படவில்லை என அரசும் பொலிஸாரும் என்னதான் கூறினாலும் அரசு கூறுவது உண்மையென இன்னமும் மனசாட்சிக்கு ஏற்ப நம்ப முடியாது உள்ளது.

அவ்வாறு நடக்கவில்லை என்றால் அதனை நிரூபிக்க அரசு சரியான காரணிகளை முன்வைத்திருக்கவேண்டும்.

ஒரு நல்ல வேலையில் இருக்கும் பெண், குடும்பம் பிள்ளைகள் என இருக்கும் பெண் ஒருவர் புதிய அரசு உருவாக்கப்பட்ட 10 நாள்களில் தனது உயிர், குடும்பம், பிள்ளைகளின் உயிரைக்கூடப் பொருட்படுத்தாது இவ்வாறான குற்றச்சாட்டு ஒன்றை முன்வைப்பாரா? அதுவும் இவர்களின் கடந்த கால அரசியல் செயற்பாடுகள் நன்றாகத் தெரிந்த ஒருவர் அவ்வாறு முறைப்பாடு ஒன்றைச் செய்வாரா? – என்றார். (ஐ)

# யாழ். ஆயரை நேற்றுச் சந்தித்து ஆசி பெற்றார் வடக்கு ஆளுநர்





யாழ்ப்பாணம், ஜன. 09

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் யாழ். ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

புதிய ஆளுநராக கடந்த வாரம் கடமைகளைப் பொறுப்பேற்ற ஆளுநர், நேற்றுத் தனது பணிகளை ஆரம்பிப்பதற்காக, ஆயரிடம் ஆசி பெற்றுக்கொள்ளும் வகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள், எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் ஆயருடன் ஆலோசிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி கோட்டாபய முன்னிலையில், திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் அண்மையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இதனையடுத்து யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண ஆளுநரின் செயலகத்தில் அவர் கடந்த 2ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ – 07)

# வடமராட்சி கிழக்கில் மணல் கடத்தலை தடுக்க 30 பேர் கொண்ட சிறப்பு பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜன. 09

வடமராட்சி கிழக்கில் சட்டத்துக்குப் புறம்பாக மணல் அகழ்வு மற்றும் மணல் கடத்தலைத் தடுக்க 30 பேர் கொண்டு சிறப்புப் பொலிஸ் பிரிவு ஒன்று காங்கேசன்துறைப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீரவால் நியமிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதிகளான குடத்தனை, பொற்பனை மற்றும் மணற்காடுப் பகுதிகளில் கடந்த ஒரு மாத காலப்பகுதியில் பெருமளவான மணல் சட்டத்துக்குப் புறம்பாக அகழப்பட்டுள்ளது. இதனால் அந்தப் பகுதிகளுக்குள் கடல் நீர் உட்புகும் அபாயம் உள்ளது என்று மக்களால் அச்சம் வெளியிடப்பட்டு வருகிறது.

அந்தப் பகுதிகளில் சட்டத்துக்குப் புறம்பான மணல் அகழ்வைத் தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் மக்களால் தெரிவிக்கப்படும் அதேவேளை, மக்கள் களத்தில் இறங்கி மணல் கடத்தல்களைத் தடுத்து வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை அந்தப் பகுதிகளில் இடம்பெற்ற மணல் கடத்தல்களைத் தடுக்கச் சென்ற பொலிஸார் மீது மணல் கடத்தல் கும்பலால் கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலைத் தொடர்ந்து கும்பலால் கைவிட்டுச் சென்ற 3 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு டிப்பர் வாகனத்தையும் பொலிஸார் மீட்டிருந்தனர்.

இந்த நிலையில் வடமராட்சி கிழக்கில் சட்டத்துக்குப் புறம்பாக மணல் அகழ்வு மற்றும் மணல் கடத்தலைத் தடுக்க 30 பேர் கொண்டு சிறப்பு பொலிஸ் பிரிவு ஒன்று காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீரவால் நியமிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதி மக்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையம் மற்றும் பொலிஸ் அவசர பிரிவுக்கு அறிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பத்தில் இந்த பொலிஸ் குழு விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நாளை 10.01.2020 -வெள்ளிக்கிழமை**

நட்சத்திரம்: திருவாதிரை பி.ப. 03.30 வரை
திதி : பூரணை பி.இ. 01.45 வரை

இராகுகாலம் : 11.03 – 12.33
சுப நேரம் : 06.33 – 08.03

# யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழமுதம் நிகழ்வு ஆரம்பம்











யாழ்ப்பாணம், ஜன. 09

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழமுதம் நிகழ்வு பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் நேற்றுக் காலை ஆரம்பமாகியது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் இவ்விழா இவ்வருடம் 'மொழிதனைக் கடையும் இளையவர் பயணம்' என்ற தொனிப் பொருளில் இடம்பெறுகிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் நோக்கிய எழுச்சிப் பேரணியுடன் நிகழ்வுகள் நேற்றுக் காலை ஆரம்பமாகின.

இதன்போது, தமிழர் கலாசார – பண்பாட்டு அடையாளங்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்த சிலம்பு, கரகம், பொம்மலாட்டம், புலியாட்டம், கம்படி, கரகாட்டம் மற்றும் இன்னியம் முழங்க விருந்தினர்கள் பிரதான வளாகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் வடக்கு மகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, யாழ்.மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னல்ட், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன், அதன் செயலாளர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி சுகாஷ், மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் மற்றும் மாணவர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர் .(ஐ – 07)

# கிறீஸ் நாட்டு எல்லையில் யாழ். இளைஞரின் சடலம்

## வெளிநாடு செல்லமுயன்றவேளை உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 09

சட்டவிரோத முகவர்கள் ஊடாக ஐரோப்பாவுக்கு நுழைய முயன்ற யாழ்ப்பாணம் இளைஞர் ஒருவர் கிறீஸ்நாட்டுஎல்லைக்கருகேசடலமாகமீட்கப்பட்டுள்ளார்.

நெல்லியடி, வதிரியைச் சேர்ந்த மயில்வாகனம் ரஞ்சன் என்ற 38 வயதுடையவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். கடந்த 24ஆம் திகதி கிறீஸ் நாட்டுக்குள் நுழையும் முயற்சியின்போது இவரின் உயிர் பிரிந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

ஐரோப்பிய நாடு ஒன்றுக்குச் செல்லும் நோக்குடன் சட்டவிரோத முகவர் ஊடாக ரஞ்சன் இலங்கையில் இருந்து புறப்பட்டிருந்தார்.

இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்குச் சட்டவிரோதமாக ஆள்களைக் கடத்தும் முகவர்கள் துருக்கியில் இருந்து கிறிஸ் நாட்டு எல்லைக்குள் சட்டவிரோதமாக ஆள்களைக் கொண்டு சென்று, அங்கிருந்து பிரான்ஸ் நாட்டுக்கு கடத்துவது வழமை என்று கூறப்படுகின்றது.

துருக்கியில் இருந்து கிறிஸ் நாட்டுக்குள் நுழைவதற்கு நீண்ட தூரம் கால் நடையாகப் பயணிக்கவேண்டும். கடும் குளிர் மத்தியில் காடுகள் ஊடாக மேற்கொள்ளும் இந்தப் பயணம் மிக ஆபத்தானதாகும்.

ரஞ்சனும் டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி ஆள் கடத்தல் முகவர்களால் கிறிஸ் நாட்டு எல்லை நோக்கி அழைத்துச் செல்லப்பட்டார் என்று அறிய முடிகின்றது. ஆனால் அவர் கிறிஸ் சென்று சேரவில்லை.

தற்போது எல்லைக் காட்டுப் பகுதியில் துருக்கிப் பொலிஸாரால் ரஞ்சனின் உடல் மீட்கப்பட்டுள்ளது. ரஞ்சனின் உடலில் சில காயங்கள் காணப்படுகின்றன என்று அந்த நாட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

ஆள்கடத்தல் முகவர்களால் ரஞ்சன் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் உள்ளது. அவ்வாறான சம்பவங்கள் முன்னைய காலங்களில் நடந்துள்ளன.

இலங்கையில் இருந்து, முக்கியமாக வட பகுதியில் இருந்து சட்டவிரோத ஆள் கடத்தல் முகவர்கள் ஊடாக வெளிநாடு பயணிப்போரின் எண்ணிக்கை அதிகம்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சட்டவிரோத ஆள்கடத்தல் முகவர் ஊடாக வெளிநாடு பயணித்த யாழ்ப்பாண இளைஞர் ஒருவர் பனாமா காட்டில் சடலமாக மீடகப்பட்டிருந்தார். (ஐ)

# பாதையினை மாற்றியது ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ்

*கொழும்பு, ஜன. 09*

*ஈரானுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் அதிகரித்துள்ள போர்ப் பதற்றம் காரணமாகப் பயணப்பாதையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.*

*ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் நிறுவனத்தினால் நேற்றுப் புதன்கிழமை வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*கொழும்பு - லண்டன் - கொழும்பு வான்வெளி பயணப்பாதையிலேயே இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள அமெரிக்காவின் அல் ஆசாத் விமானப்படைத் தளம் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது.*

*அடுத்தடுத்து ஒன்பது தடவைகளுக்கு மேல் இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.*

*இந்த நிலையிலேயே பயணப்பாதையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)*

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE

உலகெங்குமிருந்து

உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.

உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.

No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com



காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் – மார்கழித் திருவாதிரை உற்சவ

## தேர்த்திருவிழா சிறப்பிதழ் – 09.01.2020

சீரோடு எமையாளும் காரை நகர் வாழும்
சிதம்பர வாணனைப் பாரும் – ஐந்து
தேரோடும் பெருமானின் திருவாசல் படியேற
தீராத வினையெல்லாம் தீரும்.




# Kurinchi HOME(PVT) LTD

No.04A, PERERA LANE, COL.06, SRI LANKA / WWW.KURINCHIHOME.COM

## OUR PROJECTS



19 BOSWELL PLACE,
COLOMBO : 06



22 VIVEKANANDA RD,
COLOMBO : 06



61, 37TH LANE,
COLOMBO : 06



23,40TH LANE,
COLOMBO : 06

BEST LIVING & INVESTMENT IN WELLAWATTE

GREEN CERTIFIED BUILDING



## LUXURY APARTMENTS FOR DAY RENT









BE OUR GUEST & FEEL LUXURY EXPERIENCE!

FOR INQUIRES : +94766602202 / +94777044501
+94762901111

http://www.kurinchihome.com/

## காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் – மார்கழித் திருவாதிரை உற்சவ

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் – 09.01.2020

இன்று தேரேறி வரும் தில்லையம்பலவன் அருள்
எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.



**நவம் ரெக்ஸ்**
இல. 33, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: இல.10, யூபிலி பஸார், யாழ்ப்பாணம்.

**செந்தூரன்** வாசனை பத்திகள்
ஜே.பி.சிவசுப்பிரமணியம் (பிரைவேற் லிமிட்டட்)
இல.10, எஸ்.எம்.கேணியடி, காரைநகர்.




## நிரந்தர விடிவு கைசேர சிதம்பரப் பெருமானே தேரில் வா!



சீரோடு எமையாளும் காரை நகர் வாழும்
சிதம்பர வாணனைப் பாரும் – ஐந்து
தேரோடும் பெருமானின் திருவாசல் படியேற
தீராத வினையெல்லாம் தீரும்.
பேர் பெறும் வாழ்வினை நீர்பெற வேண்டில்
ஓடோடி அவன் நாமம் கூறும் – எதையும்
யாரோடும் நோகாமல் அவனோடு நொந்தாலே
அழகாக உம் வாழ்வு மாறும்.

நிரந்தர அமைதியை நிரந்தர மாக்கிட
சிதம்பர தரிசனம் செய்வோம் – எமக்கு
வரம்தர அவன்போல் பரம்பொருள் இல்லை
கரம் தொழக் கெதியினில் உய்வோம்.
பெருமிடர் கருகிட ஒருமுடர் தீர்த்தம்
பருகிடப் பலவினை மாய்க்கும் – அப்பன்
திருவிடம் போலெமக்கு ஓரிடம் இந்தத்
தரணியில் எங்கெடா வாய்க்கும்?

திருமுகம் கண்டுநாம் பெறும் சுகம் கோடி
தேரையே எம்விழி நோக்கும் – ஐயன்
வரும்வழி எங்கிலும் நறுமலர் பூத்திட
வாஞ்சையாய் அலைகளும் பூக்கும்.
திருத்தலம் அதிர்ந்திட தவில்நாதஸ் வரமும்
பறையொடு உடுக்கையும் முழங்கும் – ஈசன்
அருளிடம் எப்பவும் நிழலிடம் போலவே
அடியவர்க் கென்றும் விளங்கும்.

நிரந்தர விடிவு கைசேர வேண்டி
சிதம்பரப் பெருமானே தேரில்வா – உன்னை
கரம்தொழும் அடியர் கலியெலாம் அகல
கருணை காட்ட நீ நேரில்வா.
வரம் தர வேண்டி வலம்வரும் வள்ளலே
வழிபிறந்து இம்மண் விடியவா – உந்தன்
புறம்புறம் அழுது இறைஞ்சுறோம் இறைவனே
பொய்யிலா வாழ்வெமக்கு ஒளிரவா.

- கவிப்புலவர் வேலணையூர் சுரேஷ்.

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

இல.10, மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன்,
நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம்,
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

## காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் – மார்கழித் திருவாதிரை உற்சவ

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் –09.01.2020

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் பஞ்ச தேர் பவனி

தொன்மையும் வரலாற்றுச் சிறப்பும்மிக்க காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழி திருவாதிரை உற்சவத்தில் இன்று ஐந்து தேர்கள் பவனி வரும் திருநாளாகும். நம் நாட்டில் பஞ்ச ரதங்கள் பவனி வருவது ஒரு சில ஆலயங்களில்தான். அவற்றுள் ஒன்றாக ஈழத்துச் சிதம்பரம் விளங்குகிறது. யாழ்ப்பாணத்தில் நெற்றித் திலகமாக விளங்கும் காரைநகர் யாழ்ப்பாணத்திலிருந்து 20 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இந் நகர் ஈழத்துச் சிதம்பரம் என்னும்புண்ணியதலத்தையும்இயற்கை அழகு கொஞ்சும் ஆழம் குறைந்த கசூரினா கடற்கரையையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

சைவ ஆலயங்களைக் கோயில் என்று பொதுவாக அழைத்தாலும் சிறப்பாகக் கோயில் என்பது சிதம்பரத்தையே குறிக்கும். தமிழகத்தில் உள்ள சிதம்பரம் சைவ மக்களின் முதன்மையான ஆலயமாகக் கருதப்படுறது. சிதம்பர மகா தலம் உலகின் இருதய ஸ்தானமாகக் கருதப்படுகிறது. பஞ்ச பூதத் தலங்களில் ஆகாயத் தலமாக விளங்குகிறது. இத் தலம் தில்லை, தில்லையம்பலம், பொன்னம்பலம், பூலோக கைலாயம், புலியூர் என்றெல்லாம் போற்றும் பெருமையுடையது.

மார்கழி திருவாதிரை உற்சவமும், ஆருத்திரா தரிசனமும் பக்தி பூர்வமாகவும் கோலாகலமாகவும் நடைபெற்று வரும் தலமாகும். இதே போன்று ஈழத்துச் சிதம்பரத்திலும் அவை மிகச் சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் நடைபெற்று வருகின்றன. அத்தலத்தில் பின்பற்றப்படும் கிரியை முறைகள் பாரம்பரியமாக இவ் வாயத்திலும் பின்பற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ஈழத்துச் சிதம்பரத்தில் அருஉருவத் திருமேனியாக விளங்கும் சிவலிங்கம் மூலஸ்தானத்தில் அமர்ந்து அருள் பாலிக்க, அடுத்து பூரணை புட்கலை சமேத ஐயனார் அமர்ந்து அருள் பாலித்து வருகின்றார். சிதம்பரத்தில் சிவனுக்கு அருகில் திருமால் அமர்ந்திருந்து அருள் பாலிப்பதை ஒப்பதாக இது அமைகின்றது. இங்கு வீற்றிருக்கும் நடராசப் பெருமானுக்கும் சிதம்பரத்தில் வீற்றிருக்கும் நடராசப் பெருமானின் திரு உருவத்திலும் திருப் பொலிவிலும் ஒத்து விளங்குகிறார் என அறிஞர் பெருமக்கள் கூறுகின்றனர். இதனால் ஈழத்தில் உள்ள சிதம்பரமாகக் கருதி (ஈழத்துச் சிதம்பரமாக) வழங்கி வருகின்றார்கள்.

மார்கழித் திருவாதிரை விழாவை சிதம்பரம் சென்று வழிபட முடியாத அடியார்கள் ஈழத்துச் சிரம்பரத்துக்கு வருகை தந்து எம் பெருமானின் திரு நடனக் காட்சியைக் கண்டு களிக்கின்றனர். இறைவனின் இருபத்தைந்து உருவத் திருமேனிகளில் முதன்மை பெறுவது நடராஜப் பெருமானின் திருவுருவமாகும். அவர் ஆடும் கூத்தை ஆனந்தக் கூத்து, அற்புதக் கூத்து, தாண்டகம், பரம நாடகம் என அழைக்கின்றனர். அனவரதமும், ஆனந்த நடனம் ஆடிக் கொண்டிருப்பதால் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அவரின் திரு நடனம் ஐந்தொழிலையும் ஆற்றிய வண்ணம் இருப்பதால் பஞ்ச கிருத்திய நடனம் எனவும் அதைக் கூறுவர்.

தேரில் ஆரோகணிப்பதற்காக சிவகாம சுந்தரியுடன் குஞ்சித பாத நடராஜப் பெருமான் உள்வீதியில் ஆடி ஆடி அசைந்து வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாய், குமிண் சிரிப்பு, பனித்த சடையும் பவளம் போல் மேனி, பால் வெண்ணீறு, எடுத்த பொற்பாதம்.. ஆ! என்னே அப்பனின் திருக் கோலம்? ஆடி வரும் காட்சியைக் கண்டு கனிந்த மெய்யடியார்கள் மெய்தான் விதிர்ந்து கண்ணீர் ததும்பி, வெதும்புகின்ற நிலையைக் காண முடிகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)



VARUDA ENTERPRISES
No. 130/A, Palaly Road, Kantharmadam, Jaffna,SriLanka
T.P: +94 7700 74 903

பிள்ளையார் ஹாட்வெயர் &மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்
யாழ். சாலை, கிளிநொச்சி. யோகபுரம், மல்லாவி.
021- 228 3663

கஜமுகன் ஹாட்வெயர்
இல.147, 149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 2833

முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை
யாழ். சாலை, கிளிநொச்சி. யோகபுரம், மல்லாவி.
021- 228 5137

நியூ திருப்பதி ரெக்ஸ்
இல.50, பள்ளிவாசல் லேன், பெரியகடை, யாழ்ப்பாணம்.
021- 320 2590

கண்டி பற்றிக் சென்ரர்
26 1/1, பிரதான வீதி, கொழும்பு -11
011 - 232 9661

வெங்கடேஸ்வரா
இல.66, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021- 222 8306

மணி ஐயப்பா நகைப்பூங்கா
கந்தசுவாமி கோவில் முன்பாக, யாழ்சாலை, கிளிநொச்சி.
021-2280067

கல்கமுவ ஸ்ரோர்ஸ்
இல.133/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
021 222 0966

சிறி மாதவன்
இல.97, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021- 222 6365

அற்புதா ரேடிங் கம்பனி
இல198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

K.S.M Communication
146, Morden Market, Jaffna.
T.P: 021 222 3079, Fax: 021 221 6622

காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் – மார்கழித் திருவாதிரை உற்சவ

தேர்த்திருவிழா சிறப்பிதழ் – 09.01.2020

இன்று தேர் ஏறிவரும் தில்லையம்பலவன் அருள் எல்லோருக்கும் கிடைத்திடப் பிரார்த்திக்கின்றோம்.




# எவகிறீன் அச்சகம்
## யாழ்ப்பாணம்

வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்தில் முதல் முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்.

கலைத்துவமும், நவீன தொழில் நுட்பமும் இணைந்த துரித அச்சக சேவை

ஒரே சமயத்தில் பல வண்ணங்களில் அச்சிடும் இயந்திரம் மூலம் குறைந்த செலவில், குறுகிய நேரத்தில் அதி உயர் தரத்தில் அச்சிட்டுத் தருகின்றோம்.

HEIDELBERG Speedmaster



ஒரே நேரத்தில்
15000 பிரதிகள்
(ஒரு மணித்தியாலத்தில்)
(15000 X 4 = 60000 IMPRESSION)
4 வர்ணங்கள்
+
Vanish Coating
Glossy / Matt

Evergreen EXPRESS PRINTING

EVERGREEN PRINTERS

இல. 693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

021 221 9893

Mobile : 0777 1414 44

Email : evergreenjaffna@gmail.com



HIGH TECH DESIGNING &
HIGH TECH PRINTING WITH US

வாடிக்கையாளர்களுக்கும் அச்சக நிறுவனங்களுக்கும் விசேட விலைக்கழிவு.

## காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் – மார்கழித் திருவாதிரை உற்சவ

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் – 09.01.2020



(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனந்தத் தேன் சொரியும் அற்புதக் கூத்தை கண்ணாரக் கண்டு களிக்க வேண்டுமென்ற அவாவினால் உள்வீதி உலா வருகின்றார். மேள நாதஸ்வர வாத்திய குழாம் மல்லாரி முழங்க, இருக்கொடு தோத்திரம் இயம்புகின்ற அந்தணர்ப் பெருமக்கள் ஒரு பால் ஓதிவர, சென்னியில் அஞ்சலி கூப்பிய கையினர் ஒரு பால் வர, அரோகரா என்னும் ஒலி எத்திசையும் முழங்கி வர, எம் பெருமான் ஆடி ஆடி வந்து தேரில் ஆரோகணிக்கின்றார்.

ஐந்து தேர்கள் திருக்கோயிலின் பெரும் வீதியாம் மூன்றாம் வீதி யில் ஒன்றன் பின் ஒன்றாகப் பவனி வரும் காட்சி அற்புதமானது. விக்கினங்கள் தீர்க்கும் விக்கினேஸ்வரப் பெருமானுடன் வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமானும் முதலாம் தேரில் பவனி வர, இரண்டாம் தேரில் அரிஹர புத்திரர்களாகிய ஐயனார், பூரணை, புட் கலை சமேதராக வர, மூன்றாம் தேரில் ஆடலே புரியும் அம்பலக் கூத்தன் ஆனந்தக் கோலத்தில் வர, நான்காம் தேரில் பால் நினைந் தூட்டும் தாயாகிய சிவகாமி அம்மையார் பவனி வர, ஐந்தாம் தேரில் திருவாசகம் தந்த மாணிக்க வாசகப் பெருமான் சிவவுலா வரும் காட்சி அற்புதமானது.

ஆடவர்கள் பிரதட்சணம் செய்து வர, பெண்கள் பஞ்சாங்க நமஸ் காரம் மூலம் அடியழித்து வணங்கி வர, எம்பெருமானின் புகழ் பாடிப் பரவும் பஜனைக் கூட்டத்தினர் பாடி வரும் காட்சிகள் தெய்வீகப் பரவச நிலைக்கு உயர்த்துகின்றன.

பத்தாம் நாள் திருவாதிரைத் திருநாளாகவும் அதிகாலை இரண்டு மணியிலிருந்து நடராசப் பெருமானுக்கும் சிவகாம சுந்தரிக்கும் விசேட அபிஷேக நடைபெறத் தொடங்கும். பல்வேறு பட்ட அபிஷேகத் திரவியங்கள், பலநூறு குடங்களில் பால், தயிர், இளநீர் ஆகியவற்றால் விடிய விடிய அபிஷேகங்கள் நடந்து கொண்டிருக்கும். புகழ் பெற்ற தவில், நாதஸ்வர வித்துவான்கள் இசை மழை பொழிந்து கொண் டிருப்பார்கள். சூரிய உதயத்தில் ஆருத்திரா தரிசனம் கண்டு களிப்பார்கள். இத் தரிசனத்தையும் அபிஷேனத்தையும் கண்டு களிப்பவர்கள் பெரும் பாக்கியசாலிகளாவர். நாமும் தரிசித்துப் பலன் பெறுவோமாக!

**கலாபூஷணம் பண்டித மு.சு. வேலாயுதப்பிள்ளை**
**(தலைவர், மணிவாசகர் சபை, காரைநகர்)**

**ஸ்ரீ துவாரகா ரெக்ஸ்**
229 2/3, பிரதான வீதி,
கொழும்பு -11

**சென்ரல் ஏஜென்சி**
லாவ்ப் காஸ் விநியோகஸ்தர்கள்
519 C, ஜெயந்தி மாவத்தை, அனுராதபுரம்.

**நோர்த் ஏஜென்சி**
இல. 169, சந்தை உட்புறம்,
அனுராதபுரம்.

**ஏகாம்பரம் புடைவை மாளிகை**
இல.74(7),பெரிய கடை, யாழ்ப்பாணம்.
021 - 2222151

**பொன்னம்பலம்**
அரிசி ஆலையும் அரைக்கும் ஆலையும்
ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில்

**சிவனருட்செல்வன் அரிசி ஆலை**
பெரிய பரந்தன், கரடிப்போக்கு, கிளிநொச்சி.
021 - 228 0009

**Be. Es. En. TRADERS**
EG1, Central Road,Colombo 12, Srilanka.
011-234 8418

**சம்பந்தன் அரிசி வாணிபம்**
புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சி
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

**கதிர் ஓயில் சொப்**
A9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி
021 - 228 5317

**நல்லைக் குமரன் ஹாட்வெயர்**
A-9 வீதி, கிளிநொச்சி.
021- 2285405.

**குமரன் புடைவையகம்**
A-9 வீதி, கிளிநொச்சி.
021- 2285374

**T.S. ரான்ஸ்போட்ஸ்**
கிளிநொச்சி. முல்லைத்தீவு.
077 - 247 4128

காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் – மார்கழித் திருவாதிரை உற்சவ

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் – 0901.2020



ஈழ மணி நாட்டின் சிறப்பு மிக்க சிவ தலங்களில் ஈழத்து சிதம்பரம் எனப் பெயர்பெறும் காரைநகர் சிவன் கோவிலும் ஒன்றாகும். இந்துக்களின் பஞ்ச பூத தலங்களில் ஒன்றான ஆகாயத் தலமான தென்னிந்தியாவில் இருக்கின்ற சிதம்பரத்தை ஒத்த சம்பிரதாயங்கள் பேணிப் பாதுகாக்கப் படுகின்ற ஒரு தலமாக காரைநகர் திண்ண புரம் பதியில் அமைந்திருக்கும் புண்ணிய தலம் விளங்குகிறது.

இது, மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் ஒரு கோவிலுக்குரிய அனைத்து அடிப்படை அம் சங்களும் அமைந்து 168 வருட வரலாறு கொண்ட ஒரு தலமாகும். இங்கே அருள்மிகு சௌந்தராம்பிகை சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வர பெருமான் ஆலயத்தில் அருள்பாலித்து கொண்டு இருக்கின்றனர்.

இக் கோவிலில் பங்குனி உத்தரம் ஒட்டிய மகோற் சவம், ஆடிப்பூரத்தை ஒட்டிய அம்பாள் மகோற்சவம் என்பன இரு பெரும் மகோற்ச வங்களாக நடைபெறு கிறது. இருந்தபோதும் மார்கழி மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்ட மார்கழி உற்சவமே விசேடமானதாகும்.

ஈழத்தின் தலைசிறந்த வியாபார விற்பன் னர்களாகவும், கல்விமான்களாகவும், சிவ பக்தர்களாகவும் விளங்குகின்ற காரைநகர் மக்கள் இக் கோவிலின் திருவாதிரை மகோற் சவ காலத்தில் பஞ்சரதத்தில் பவனிவருகின்ற இறைவனை ஆராதிப்பதற்கென தமிழ் நாட்டி லிருந்தும் ஈழத்தின் பல பகுதிகளிலிருந்தும் தவில், நாதஸ்வர வித்துவான்களை வர வழைத்து இசை அலையை உருவாக்கி ஆடல் வல்லான் நடராஜபெருமானை இசையை வைத்து தம் இஷ்ட சித்திகளைப் பெற்று உய் கின்ற காட்சி கண்கொள்ளாதது ஆகும்.

எம் ஊரவர்க்கு இயல்பாகவே இருக்கின்ற இயல்பூக்கமும், கடின உழைப்பும் தனித்து வமானது என மற்றவர் போற்றுவது போல் இவ் ஆலயத்தில் பின்பற்றப்படும் சம்பிர தாயங்களும் தனித்துவமானவையாகும். அதாவது இங்கு இருக்கின்ற திரு உலாவரு கின்ற நடராஜ பெருமானது திரு உருவச்சிலை பதஞ்சலி வியாக்கிரபாதர் எனும் முனிவர்க ளுடன் கூடியதாகும். இவ்வித மாக முனிவ ருடன் கூடிய சிவகாமி அம்பாள் சமேதராக அமர்ந்திருக்கும் பாவனையில் உள்ள திரு உருவம் இந்தியாவிலும் இரண்டொரு தலங் களில் மாத்திரமே உள்ளது.

அவனருளாலே அவன்தாள் வணங்கி அருள் பெறும் பாக்கியம் இன்று இங்கு கூடி இருக்கும் பூமி பந்தின் எல்லா மூலைகளில் இருந்தும் வருகை தந்த பக்தர்களுக்கு கிடைத் துள்ளது. உல கெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன் ஆகிய எம் பெருமானுடைய பஞ் சரத பவனியை காண வந்திருக்கும் அனைத்து பக்த அடியார்களும் அவனுடைய அருளை பெற்று உய்யப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

திரு. கு. சிவஞானசுந்தரம்

இன்று தேரேறி வரும் தில்லையம்பலவன் அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.


சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
இல.41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
021- 222 2063

கணேசன் ஸ்ரோஸ்
இல.201, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021- 222 2830

இளவரசி சேலைச் சோலை
இல.125, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021- 222 2503

றூபா பன்முக வர்த்தக நிலையம்
இல.104 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நாராயணா ஹாட்வெயர்
இல.92 C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021- 222 5390

இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்
இல.105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021- 222 6953

நியூ வேல் முருகன் ஜுவலர்ஸ்
இல.186, பசார் வீதி, வவுனியா.
024- 222 8157

மகாராணி பட்டுச்சோலை
இல.50, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
021- 222 3104

தனம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
இல.22 A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
021- 222 8544

சிறி சிவராம் ரேடர்ஸ்
இல.248, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021- 222 8629

T.S.K. TRADERS
இல.41, சூசைப்பிள்ளையார் குளம், வவுனியா.
024- 222 6149

லலிதா ரெக்ஸ் ஸ்ரீ லலிதா பெஷன்
இல.5,6, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
021 222 5260
இல.165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் – மார்கழித் திருவாதிரை உற்சவ

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் – 09.01.2020

திருமுகம் கண்டுநாம் பெறும் சுகம் கோடி
தேரையே எம்விழி நோக்கும் - ஐயன்
வரும்வழி எங்கிலும் நறுமலர் பூத்திட
வாஞ்சையாய் அலைகளும் பூக்கும்.
திருத்தலம் அதிர்ந்திட தவில்நாதஸ் வரமும்
பறையொடு உடுக்கையும் முழங்கும் - ஈசன்
அருளிடம் எப்பவும் நிழலிடம் போலவே
அடியவர்க் கென்றும் விளங்கும்.





### காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் - மார்கழித் திருவாதிரை உற்சவ

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 09.01.2020

## சத்தான தீர்வொன்றைத் தரத்தேரில் வந்தருள்க!

ஈழத்துச் சிதம்பரர்க்கு
இவ்வுலகக் காவலர்க்கு
ஆழப் பதிந்தெங்கள்
அடிமனதில் உறைபவர்க்கு
வாழும் அடியவர்கள்
வடம்பிடிக்கத் தேரோடும்
நாளும் இன்றைக்காம்
நானிலத்தோர் கேண்மீனோ!

இம்மைக்கும் மறுமைக்கும்
இறைவனாக ஆகுபவன்
அம்பலத்தில் ஆடியாடி
அகிலத்தை ஆட்டுவித்து
நொம்பலத்தை நேர்செய்து
நோவுக்கு மருந்தாகும்
அம்பலத்து அரசனுக்கு
அழகுரதம் காண்மீனோ!

பேயாடும் சுடலையிலே
போயாடும் பெருமானை
ஆயனுக்கு மைத்துனனை
அடியவர்க்கு எளியவனை
வாயோடும் மனத்தோடும்
வழுத்துகின்ற நாளதிலே
நேயனுக்குத் தேராம்
நீளுலகோர் கேண்மீனோ!



பஞ்சரதம் தானோட
மெய்யடியார் சேர்ந்தோட
நெஞ்சத்துள் நிமலனருள்
நிறைந்தோட வியனுலகின்
விஞ்சுபுகழ் விண்ணவனை
விண்ணவரும் மண்ணவரும்
மஞ்சத்தில் கண்ணுற்று
மனங்குளிரும் காண்மீனோ!

செத்துப் பிழைத்தோமே
செகமெல்லாம் அலைந்தோமே
எத்ததுணைநாள் நம்பிநம்பி
ஏமாந்தும் இன்னுமின்னும்
இத்தரையில் எம்பாவம்
தீரலையோ பித்தாநீ
சத்தான தீர்வொன்றை
தரத்தேரில் வந்தருள்க!

வ.வடிவழகையன்
காரையூர் கவிஞர்.

**இன்று தேரேறி வரும் தில்லையம்பலவன் அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.**

**ஆரணி பல்பொருள் வாணிபம்**
புதுறோட் சந்தி, காரைநகர்.

**லக்சுமி பான்சி**
இல.275, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**பிள்ளையார் வண்ணச்சோலை**
யாழ். சாலை, கிளிநொச்சி
021- 228 5789

**த.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்**
இல. 21, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 - 222 9965

**செல்லமுத்தூஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
நெல்லியடி, கரவெட்டி.
021- 226 3238

**விசாகன் றேடேர்ஸ்**
இல.133/10, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021- 222 3032

**ரி.கே. பசன்**
இல. பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
021 - 221 4012

**மதுரா நகை மாடம்**
இல.59, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021- 222 2804

**நல்லைக் குமரன் ரெக்ஸ்**
இல.405, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

**சண் மோட்டோர்ஸ்**
இல.779, கே.கே.எஸ் வீதி,
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.
077-616 5155

**ஞானம் அழகு மாடம்**
இல.87, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021- 222 0295

**கிருஷ்ணா நகைமாளிகை**
இல.09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021- 222 5046

**அருண் ரெக்ஸ் அன் பான்ஸி பலஸ்**
பி தான வீதி, நெல்லியடி.
021- 226 2857

**தமிழ்க்கங்கை வண்ணச்சோலை**
**தமிழ்க்கங்கை ஹாட்வெயார்**
A-9 சாலை, கிளிநொச்சி.
021- 228 5853

**ஆறுமுகம் ரெக்ஸ்ரைல்ஸ்**
இல. 20, பெரியகடை, யாழ்ப்பாணம்.

காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் – மார்கழித் திருவாதிரை உற்சவ

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் – 09.01.2020





# SRI MURUGAN

COMMUNICATION & AGENCY POST OFFICE

WESTERN UNION WU

மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.

உலகெங்குமிருந்து

உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.

உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

SILVER SHIELD

பாடசாலை மாணவர்களுக்கு மாபெரும் விலைக்கழிவு

கடந்த 30 ஆண்டுகளாக யாழ்.நகர் மக்களின் தரச்சிறப்பு மிக்க துறைகள் (Socks)

SILVER SHIELD SOCKS


பாடசாலை மாணவர்களுக்கும், அலுவலக ஊழியர்களுக்கும், சிறியோர் முதல் பெரியோர் வரை, சகல தரத்திலும், சகல அளவுகளிலும் பெற்றுக் கொள்ள



ஸ்ரீ முருகன்

இல.303.கே.கே.எஸ்.வீதி 021 222 5392

No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com


காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் – மார்கழித் திருவாதிரை உற்சவ
தேர்த்திருவிழா சிறப்பிதழ் –09.01.2020
வரம் தர வேண்டி வலம்வரும் வள்ளலே
வழிபிறந்து இம்மண் விடியவா - உந்தன்
புறம்புறம் அழுது இறைஞ்சுறோம் இறைவனே
பொய்யிலா வாழ்வெமக்கு ஒளிரவா!
Neha Fancy
Spl. For Exclusive Marriage,
Corporate Farewell Gifts,
Variety of Ganapathy &
All Temple Items Available Here
நேகா பான்ஸி
No: 208A K.K.S. Road, Jaffna.
Tel: 021 221 5869, 077 6160237
E-mail : jeyathasv1988@gmail.com
Jeyathas 077 5031533

# அமெரிக்க — ஈரான் போர் பதற்றத்தை தணிக்கும் சமரச முயற்சியில் இந்தியா?



புதுடெல்லி,ஜன.09

அமெரிக்காவுடனான பதற்றமான சூழலை தணிப்பதற்கு, இந்தியாவின் சமாதான முயற்சியை ஈரான் வரவேற்பதாக இந்தியாவுக்கான அந்நாட்டுத் தூதர் தெரிவித்தார்.

ஈரானுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே முன்னெப்போதும் இல்லாத வகையில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது. ஈரான் இராணுவத் தளபதி சுலைமானி கொல்லப்பட்டதற்கு பதிலடியாக, அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இதனைத் தொடர்ந்து எந்த நேரத்திலும் அமெரிக்கா பதில் தாக்குதலை நடத்தும் சூழல் உள்ளது.

இந்தப் பதற்றமான சூழ்நிலையில், டெல்லியில் உள்ள ஈரான் தூதரகத்தில் சுலைமானிக்கு இரங்கல் கூட்டம் நடத்தப்பட்டது. இந்தியாவுக்கான ஈரான் தூதர் அலி செகேனி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கு இந்தியா மிகச்சிறந்த பங்கு வகிக்கிறது. அதே நேரத்தில் இந்தியா இந்தப் பிராந்தியத்தில் உள்ளது. பதற்றங்கள் அதிகரிப்பதை அனுமதிக்காத அனைத்து நாடுகளிடம் இருந்தும், குறிப்பாக எங்களின் நல்ல நட்பு நாடான இந்தியாவிடம் இருந்து, அனைத்து முயற்சிகளையும் நாங்கள் வரவேற்கிறோம்.

நாங்கள் போரை விரும்பவில்லை. இந்த பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளிலும் அமைதி மற்றும் செழிப்பை எதிர்பார்க்கிறோம். இந்த உலகில் அமைதி மற்றும் செழிப்புக்கு உதவும் வகையில், இந்தியாவின் எந்தவொரு சமாதான முயற்சி அல்லது


ஈரான் தூதர் அலி செகேனி

திட்டமாக இருந்தாலும் அதனை நாங்கள் வரவேற்கிறோம். - இவ்வாறு அவர் கூறினார்.

ஈரான் வெளியுறவுத் துறை மந்திரி ஜாவத் ஜரிப், அமெரிக்க வெளியுறவுத் துறை மந்திரி மைக் பாம்பியோ ஆகியோரை இந்தியாவின் வெளியுறவுத் துறை மந்திரி ஜெய்சங்கர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடர்பு கொண்டு பேசினார். அப்போது அமெரிக்கா - ஈரான் இடையிலான பதற்றம் குறித்து அவர் கவலை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் வசிக்கின்ற இந்தியர்கள் எச்சரிக்கை பேண அறிவுறுத்தல்

## இந்திய வெளியுறவுத்துறை விடுத்தது

புதுடெல்லி,ஜன.09

ஈராக்கில் வசிக்கும் இந்தியர்கள் எச்சரிக்கையாக இருக்க இந்திய வெளியுறவுத்துறை அறிவுறுத்தி உள்ளது.

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்க இராணுவம் நடத்திய வான்தாக்குதலில் ஈரான் நாட்டு இராணுவ தளபதி காசிம் சுலைமானி கொலை செய்யப்பட்டார்.

அவர் ஈரானின் சக்தி வாய்ந்த தலைவர்களில் ஒருவராக அறியப்பட்டவர். காசிம் சுலைமானி கொல்லப்பட்ட பிறகு ஈரான் அமெரிக்கா இடையே போர் உருவாகும் சூழல் நிலவி வருகிறது.

இந்த நிலையில், ஈராக்கின் அல் அசாத் பகுதியில் இருந்த அமெரிக்க படைதளத்தின் மீது ஈரான் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளது.

பத்துக்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசி ஈரான் தாக்குதல் நடத்தியது. தாக்குதல் நடத்தப்பட்டதை அமெரிக்காவும் உறுதி செய்துள்ளது. ஈரானின் தாக்குதலில் சேதம் ஏற்பட்டதா என்பது குறித்து ஆய்வு செய்து வருகிறோம் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதனால் அமெரிக்கா எந்த நேரமும் ஈரான் மீது தாக்குதல் நடத்தும் என்ற அச்சம் நிலவி வருகிறது. இதனால் போர்ப்பதற்றம் உச்சகட்டத்தை எட்டி உள்ளது.

ஈரான், ஈராக், ஓமன் வளைகுடா மற்றும் பாரசீக வளைகுடாவின் வான் வெளி குறித்து இந்திய விமான நிறுவனங்கள் விழிப்புடன் இருக்கவும், வான் வெளியில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும்



சிவில் ஏவியேன் இயக்குனரக இயக்குனர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஈராக்கில் நிலவும் நிலைமையைக் கருத்தில் கொண்டு, இந்தியர்கள் மேலும் அறிவிக்கும் வரை ஈராக்கிற்கு அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஈராக்கில் வசிக்கும் இந்தியர்கள் எச்சரிக்கையாக இருக்கவும், ஈராக்கிற்குள் பயணிப்பதைத் தவிர்க்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பாக்தாத்தில் உள்ள இந்திய தூதரகம் தொடர்ந்து இயங்கும். ஈராக்கில் உள்ள இந்தியர்களுக்கு தூதரக உதவிகள் உடனடியாக செய்யப்படும். ஈராக்கிற்கு பயணம் மேற்கொள்வதை இந்தியர்கள் தவிர்க்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டு உள்ளது.

# நிர்பயா பாலியல் வன்முறை, கொலைக் குற்றவாளிகளை தூக்கில் போடுவதற்கான ஏற்பாடுகள் யாவையும் தயாராம்



புதுடெல்லி,ஜன.09

நிர்பயா பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகளான 4 பேரையும் தூக்கில் போடும் மீரட் ஊழியர் தயார் நிலையில் உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குற்றவாளிகள் 4 பேரும் 22 ஆம் திகதிக்குள் தூக்கில் போடப்பட வேண்டும் என்று டெல்லி நீதிமன்றம் உத்தரவிட்டதை அடுத்து அதற்கான ஏற்பாடுகள் திகார் சிறையில் தீவிரமாக நடந்து வருகின்றன.

இந்தியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்படுவது எப்போதாவது அரிதாகவே நடக்கும். கடைசியாக 2015 ஆம் ஆண்டு மும்பைக் குண்டு வெடிப்புக் கைதி யாகூப் மேமன் தூக்கில் போடப்பட்டான்.

எனவே, கைதிகளை தூக்கில் போடுவதற்கு என்று தனியாக எந்தச் சிறையிலும் ஊழியர்கள் நிரந்தரமாக இருப்பது இல்லை.

அதே நேரத்தில் இதற்கென தற்காலிக ஊழியர்களை அந்த நேரத்தில் மட்டும் அழைத்து கொள்வது வழக்கம்.

குறிப்பாக சிலர் பரம்பரையாக இந்தப் பணியில் இருக்கிறார்கள். அவர்களைத் தான் இதில் ஈடுபடுத்துவார்கள்.

டெல்லி திகார் சிறையில் இதற்கான ஊழியர்கள் இல்லை. அதே நேரத்தில் உத்தரபிரதேசம் மீரட் சிறையில் பவான் ஜலாத் என்ற ஊழியர் இருக்கிறார். இவருடைய குடும்பத்தினர் 4 தலைமுறையாக தூக்கு தண்டனையை நிறைவேற்றும் ஊழியர்களாக பணியாற்றி வந்துள்ளனர்.

வெள்ளைக்காரர்கள் ஆட்சி காலத்தில் சுதந்திர போராட்ட வீரர்களான பகத்சிங், ராஜகுரு, சுக்தேவ் ஆகியோர் லாகூர் சிறையில் தூக்கில் போடப்பட்டனர். அவர்களை பவான் ஜலாத்தின் தாத்தாதான் தூக்கில் போட்டார்.

அதைத்தொடர்ந்துஅவரதுபரம்பரையே இந்த தொழிலில்தான் இருக்கிறது.

மீரட்டில் பவான் ஜலாத் சைக்கிளில் பெட்ஷீட் வியாபாரம் செய்து வருகிறார். 4 குற்றவாளிகளையும் தூக்கில் போட தயாராக இருக்கும்படி ஏற்கனவே கடந்த மாதம் 16 ஆம திகதி மீரட் சிறை நிர்வாகத்தினர் அவரிடம் தெரிவித்து இருக்கிறார்கள்.

இந்த நிலையில் டெல்லி திகார் சிறை நிர்வாகம் தூக்கில் போடும் பணியை செய்ய 2 ஊழியர்களைத் தயாராக வைத்திருக்கும்படி மீரட் சிறைக்கு ஏற்கனவே கடிதம் அனுப்பி உள்ளது.

அதைத் தொடர்ந்து மீரட் சிறை நிர்வாகத்தினர் பவான் ஜலாத்துக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும், இனி சிறை ஜெயிலில் இருந்து மீரட் சிறைக்கு முறைப்படி கடிதம் அனுப்பப்படும். அதன் பின்னர் பவான் ஜலாத் திகார் ஜெயிலுக்கு அனுப்பி வைக்கப்படுவார்.

இது சம்பந்தமாக பவான் ஜலாத்திடம் கேட்ட போது அவர் கூறியவை வருமாறு:-

4 குற்றவாளிகளையும் தூக்கில் போடும் இந்த பணியை செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். இது போன்ற கொடிய குற்றவாளிகளை கொல்வது சமுதாயத்துக்கு அழுத்தமான ஒரு செய்தியைச் சொல்வதாக அமையும்.

அவர்கள் மிக மோசமான செயலை செய்து இருக்கிறார்கள். அவர்களுக்கு மரண தண்டனையை நிறைவேற்றுவதன் மூலம் அவர்களுடைய குடும்பத்தினருக்கும், அனைத்து மக்களுக்கும் ஒரு ஆறுதல் கிடைக்கும். எனவே, நான் இந்த பணியை மகிழ்ச்சியுடன் செய்வேன்.

ஏற்கனவே இந்தப் பணியை செய்ய தயாராக இருக்கும்படி மட்டும் தகவல் சொன்னார்கள். ஜெயில் நிர்வாகத்திடம் இருந்து முறைப்படி அழைப்பு வரவில்லை. அந்த அழைப்பு வந்ததும் நான் அதற்கு தயாராவேன் - என்று கூறினார்.

ஆனால், பவான் ஜலாத் இதுவரை யாரையும் தூக்கில் போட்டவர் அல்லர்.

நிதாரி கொலை வழக்கு குற்றவாளி, சுரேந்தர் கோலியை தூக்கில் போடுவதற்காக 4 ஆண்டுகளுக்கு முன்பு அவரை அழைத்தார்கள்.

ஆனால், அந்த தூக்கு தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டு


பவான் ஜலாத்

விட்டதால் அந்த தண்டனை நிறைவேற்றப்படவில்லை.

பவான் ஜலாத் மேலும் கூறும் போது, தூக்கில் போடும் பணிக்கான ஏற்பாடுளை செய்வதற்கு 2 அல்லது 3 மணி நேரம் தேவைப்படும். தூக்கில் போடும் கயிறு மற்றும் தூக்கு மேடை வலுவாக இருக்கிறதா என்பதை சரிசெய்ய வேண்டும். மற்றும் பல முன்னேற்பாடு பணிகளும் இருக்கின்றன என்று கூறினார்.

ஆனால், இதுபோன்ற நபர்களை தூக்கில் போடுவதில் தனக்கு மனரீதியான அழுத்தம் எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# ஈரானில் 176 பேருடன் உக்ரைன் விமானம் விழுந்து நொறுங்கிச் சின்னாபின்னமானது!

## அமெரிக்காவுடனான போர்ப் பதற்றத்திற்கிடையே தவறுதலாகச் சுட்டு வீழ்த்தப்பட்டதாகச் சந்தேகம்





தெஹ்ரான்,ஜன.08

ஈரானில் நேற்றுக் காலை நடந்த உக்ரைன் விமான விபத்தில் அதிலிருந்த 176 பயணிகளும் உயிரிழந்து உள்ளனர்.

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்க இராணுவம் திடீரென நடத்திய வான்தாக்குதலில் ஈரான் நாட்டு இராணுவ தளபதி காசிம் சுலைமானி கொலை செய்யப்பட்டார். அவர் ஈரானின் சக்தி வாய்ந்த தலைவர்களில் ஒருவராக அறியப்பட்டவர். காசிம் சுலைமானி கொல்லப்பட்ட பிறகு ஈரான் - அமெரிக்கா இடையே போர் உருவாகும் சூழல் நிலவி வருகிறது.

இந்த நிலையில், ஈராக்கின் அல் அசாத் பகுதியில் இருந்த அமெரிக்க படைதளத்தின் மீது ஈரான் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளது. 10 க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசி ஈரான் தாக்குதல் நடத்தியது. தாக்குதல் நடத்தப்பட்டதை அமெரிக்காவும் உறுதி செய்துள்ளது. ஈரானின் தாக்குதலில் சேதம் ஏற்பட்டதா என்பது குறித்து ஆய்வு செய்து வருகிறோம் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தற்போது உக்ரைன் பயணிகள் விமானத்தை ஈரான் படைகள் தவறுதலாக சுட்டு வீழ்த்தியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனிடையே உக்ரைன் நாட்டு விமானம் ஈரான் தலைநகர் தெஹ்ரான் விமானநிலையத்தில் இருந்து புறப்பட்ட சில நிமிடங்களில் விழுந்து நொறுங்கியது.

இந்நிலையில், அந்த விமானம் ஈரான் நாட்டு படைகளே தவறுதலாக சுட்டுவீழ்த்தியிருக்கலாம் என அந்நாட்டு ஊடகம் ஒன்று கூறி உள்ளது. இது தொடர்பாக உறுதியான தகவல்கள் கிடைக்கவில்லை. ஆனால் தொழில் நுட்பகோளாறு தான் விபத்து ஏற்பட்டு உள்ளது என நம்பத்தகுந்த வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரானில் இருந்து நேற்று அதிகாலை உக்ரைன் தலைநகர் கிவ் நோக்கி புறப்பட்ட போயிங் 737 ரகத்தை சேர்ந்த விமானமே (பி.எஸ் 752) புறப்பட்ட சிறிது நேரத்திலேயே கீழே விழுந்து நொறுங்கியது

விமானத்தில் இருந்த அனைவரும் உயிரிழந்தனர் என ஈரான் அரசு ஊடகம் தெரிவித்து உள்ளது. விழுந்தவுடன் விமானத்தில் தீ மளமளவென பயங்கரமாக எரிந்ததால் எங்களால் எந்த மீட்பையும் செய்ய முடியவில்லை. எங்களிடம் 22 அம்புலன்ஸ், நான்கு பஸ் அம்புலன்ஸ் மற்றும் ஒரு ஹெலிக்கொப்டர் உள்ளன என்று ஈரானின் அவசர சேவைகளின் தலைவர் பிர்ஹோசீன் கவுலிவண்ட் அரசு தொலைக்காட்சிக்கு தெரிவித்தார்.

ஈரானின் சிவில் ஏவியேஷன் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ரேசா ஜாபர்சாதே, அரசு தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் விமானத்தில் பயணித்தவர்களின் எண்ணிக்கை 176 என்று கூறினார்.

# 80 அமெரிக்கப் பயங்கரவதிகள் ஏவுகணைத் தாக்குதலில் சாவு!

## இப்படி அறிவிக்கிறது ஈரான் அரசுத் தொலைக்காட்சி

தெஹ்ரான்,ஜன.09

ஈரான் - அமெரிக்கா இடையே போர் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், ஈராக்கின் அல் அசாத் மற்றும் எர்பில் ஆகிய பகுதிகளில் உள்ள அமெரிக்கப் படை தளங்கள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. பதுக்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசி நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.



ஈராக்கில் உள்ள இராணுவத் தளங்கள் தாக்கப்பட்டமையை அமெரிக்காவின் பாதுகாப்பு தலைமையகமான பென்டகனும் உறுதி செய்தது. டொனால்ட் டிரம்பும் தாக்குதல் நடத்தப்பட்டதை உறுதி செய்திருந்தார்.

இந்த நிலையில், ஈரான் நடத்திய தாக்குதலில் 80 அமெரிக்கப் பயங்கரவாதிகள் உயிரிழந்துள்ளனர் என ஈரானின் அரசுத் தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் ஹெலிக்கொப்டர் உள்பட ஆயுதங்களும் பலத்த சேதத்துக்குள்ளாகின என அரசத் தொலைக்காட்சியில் செய்தி வெளியிட்டுள்ளது.

# திடீரென சிரியாவில் ரஷ்ய அதிபர் புடின்!

ஈரான், அமெரிக்கா இடையே எந்நேரமும் முழு அளவில் போர் மூளலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில், ஈரானின் அண்டை நாடான சிரியாவிற்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் திடீர் பயணம் மேற்கொண்டார்.



தலைநகர் டமாஸ்கஸுக்கு தனி விமானத்தில் வந்த புடினுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதையடுத்து சிரியா அதிபர் அல் ஆஸாத்தை சந்தித்து பேசிய புடின், பின்னர் அவருடன் சேர்ந்து 8ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மசூதி மற்றும் மிகவும் பழைமையான (Mariamite) தேவாலயம் ஆகியவற்றுக்கும் சென்று பார்வையிட்டார்.

# 10 ஆயிரம் ஒட்டகங்களை ஆஸி அவசரமாகச் சுட்டுக் கொல்கிறது

## தண்ணீரை அதிகம் குடிக்கின்றனவாம்







மெல்போர்ன்,ஜன.08

தண்ணீரை அதிகம் குடிப்பதாகக் கூறி சுமார் 10 ஆயிரம் ஒட்டகங்களைச் சுட்டுக் கொல்ல ஆஸ்திரேலியா முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஐந்து நாள்களில் ஒட்டகங்களைக் கொல்வதற்கு சிறப்புக் குழுவையும் ஆஸ்திரேலியா அமைத்துள்ளது. ஹெலிக்கொப்டரில் பறந்த படி ஒட்டகங்களைச் சுட்டுக்கொல்லும் பணியை இந்தக்குழு மேற்கொள்ளும்.

நேற்று ஆரம்பமான இத்திட்டம் அடுத்த ஐந்து நாள்களுக்குள் ஒப்பேற்றி முடிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தெற்கு ஆஸ்திரேலியாவில் அதிகம் காணப்படும் ஃபெரல்வகை ஒட்டகங்கள், மிக அதிகளவில் தண்ணீர் குடித்து மனிதர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றமையால் அவற்றை சுட்டுக்கொல்லும் முடிவை அந்நாட்டு அரசு எடுத்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

கடுமையான வறட்சி காலங்களில் மனிதர்கள் குடியிருப்பு பகுதிக்கு வந்து தண்ணீரை ஒட்டகங்கள் குடித்து விடுகின்றன எனவும் முறைப்பாடுகள் உள்ளன. இதன் காரணமாக அவற்றை கொல்ல அப்பகுதி மக்கள் முடிவெடுத்துள்ளனர். இந்த ஒட்டகங்களின் கழிவுகள் ஒரு தொன் கார்பன்டை ஆக்சைடுக்கு நிகரான, மீத்தேன் வாயுவை உருவாக்குகின்றன எனவும் கூறப்படுகிறது. இது புவி வெப்பமயமாதலுக்கு ஒரு காரணமாக இருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.


## ‘பிறை நிலவின் பெருங்கனவு’ நூல் வெளியீடு பல்கலையில்

யாழ்ப்பாணம், ஜன.09

நிலாக்கனி நதீரா எழுதிய ‘பிறை நிலவின் பெருங் கனவு’ நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் தமிழியற் கழக வழிகாட்டலில் நிகழும் இந்த நூல் வெளியீட்டில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழகத் தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் கே.கந்தசாமியும் சிறப்பு விருந்தினராக கலைப் பீடாதிபதி கலாநிதி கே. சுதாகரும் பங்குபற்றுவர்.

## பதின்மூன்றில் பயனில்லை அடித்துக் கூறுகின்றார் விக்கி



13 ஆவது திருத்தம் தீர்வல்ல, அது பய னற்றது என்பதை இந்தியா உணர வேண்டும். அவ்வாறு உணர்ந்து கொண்டால் 13 ஆவது திருத்தத்தை பரிந்துரைக்க இந்தியாவே தயங்கும் என்கிறார் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செய லாளர் நாயகமுமான சி.வீ.விக்கினேஸ் வரன்

இந்தியா பரிந்துரைக்கும் 13ஆவது திருத்தம் தமிழருக்கான தீர்வு இல்லை. ஒற்றையாட்சிக்குள் தரப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச் சட்ட ஏற்பாடுகள் பயன் அற்றவை.

13 ஆவது திருத்தச் சட்டம் அவர்கள் எதிர் பார்த்த மாதிரி இல்லை என்பதை இந்தியா உணர வேண்டும்.

உதாரணத்துக்கு 1992 ஆம் ஆண்டின் 58 ஆவது சட்டத்தின் கீழ் மாகாண சபை யின் நிர்வாகத்திறன் மழுங்கடிக்கப்பட்டுள் ளது.

இந்தியா இதை உணர்ந்தால் அவர்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை பரிந்துரைக்கத் தயங்குவார்கள் என்பதே எமது கணிப்பு. – இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார் என இணையத் தளச் செய்திகள் தெரிவித்தன.

## 70 புதிய அரசியல் கட்சிகள் பதிவுக்காக விண்ணப்பம்!

கொழும்பு, ஜன. 09

புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கை இம்மாத இறுதியுடன் நிறைவு பெறவுள்ளது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் முக்கிய அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

70 புதிய கட்சிகள் பதிவிற்காக விண்ணப் பித்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சில கட்சிகளின் பதிவை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள் ளதாகவும் அவர் கூறினார்.

இந் தக் கட்சிகள் தமது கணக்கறிக்கை யைச் சமர்ப்பிக்காததன் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் முக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

### 13ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் மூத்த துணைத் தலைவர் என்ற வகையில் நான் பொறுப்போடு இப்போதும் சொல்கிறேன், சென்றவர்களுக்கான கதவு திறந்திருக்கிறது. அவர்கள் யாரும் வரலாம்.

கூட்டமைப்பின் மீது விமர் சனங்கள் முன்வைக்கப்பட்டுத் தான் இருக்கின்றன. அந்த விமர் சனங்கள் தேர்தல்களில் தாக்கத் தைச் செலுத்துமென்றுதான் நான் நம்புகி றேன். ஆகவேஇல்லையென்று நான் பொய் சொல்ல விரும்பவில்லை. சில சில தவறுகள் எங்களிடமும் இருக்கின்றன. அதை நான் மறுதலிக்கவில்லை. அப்படி மறுதலிப்பது என்றால் நான் ஓர் அரசியல் போக்கிலியாக இருக்கவேண்டும்.

ஆனால் சில சில தவிர்க்க முடியாத தவறுகளும் நடந்திருக்கின்றன. அதே நேரத் தில் தவிர்க்கக் கூடியதும் தவிர்க்கப்படாமல் இருந்திருக்கின்றன. ஆனால் ஒட்டு மொத்த மாக பார்த்து நாங்கள் சில விடயங்களிலே பிழையாக இருந்தாலும் கூட எங்கள் நோக் கங்கள், இலக்குகள் சரியாக இருந்திருக் கின்றன. அதில் சில அணுகுமுறைகள் தவ றாக இருந்திருக்கலாம்.

ஆகவே எல்லாவற்றையும் மக்கள் நிறை போட்டுப் பார்த்து எங்களோடுதான் நிற்பார் கள். ஒற்றுமையின் தேவையின் அடிப்படை யில் தமிழினம் எங்களோடு நிற்கலாம். நாங்கள் பெரிய புனிதர்கள் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் மக்கள் எங்களோடுதான் நிற்பார்கள். ஏனென்றால் ஒன்றாக நிற்க வேண்டு மென்பதை மக்கள் தீர்மானிப்பார்கள்.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் பல செயற்பாடுகளை முன்னெடுத்திருக்க முடி யும். ஆனால் அவற்றை ரணில் விக்கிமர சிங்க தரப்பினர்கள் செய்யவில்லை. உண் மையில் அவர் செயற்பட்டிருந்தால் இன் றைக்கு ஆட்சிக்கு வந்த தரப்பினர்களுக்கு எதிராகப் பல நடவடிக்கைகளை எடுத்திருக்க முடியும். ஆனால் அவர் அதனைச் செய்யா மல் தள்ளிப் போட்டுச் செயற்பட்டார்.

ஆனால் இன்றைக்கு ஆட்சிக்கு வந்தி ருக்கின்ற தரப்பினர்கள் தங்களுக்கு எதிரா கக் கடந்த காலத்தில் செயற்பட்டவர்களைத் திட்டமிட்ட வகையில் பழிவாங்குகின்றனர். அதனடிப்படையிலையே கைதுகள் எல்லாம் நடக்கின்றன–என்றார். (ஐ–07)


பேராசிரியர் கலாநிதி
விஜயரத்தினம் ஜோன் மனோகரன் சென்னடி
அவர்களின்



தோற்றம்
16
12
1967

மறைவு
10
01
2018

2 ஆம் வருட வினைவஞ்சலி நிகழ்வு

1. தலைமையுரை
2. நினைவுரைகள்
3. மாணவர்கள் ஊக்குவிப்பு நிதி வழங்கல்.

இடம்
காரைநகர் இந்துக் கல்லூரி
நடராஜா ஞாபகார்த்த மண்டபம்

காலம்
10.01.2020 வெள்ளிக்கிழமை

நேரம்
மாலை 03.00 மணிக்கு

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து
(அதிகாரம் : கல்வி குறள் எண்.398)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நண்பர்கள், உறவினர்கள், குடும்பத்தினர்.

## அரச அலுவலகத்துக்குள் புகுந்தது மலைப்பாம்பு!

அம்பாறை, ஜன. 09

அம்பாறை – கல்முனைப் பகுதியில் அமைந்துள்ள அரச அலுவலகத்தின் பின்புறமாக மலைப்பாம்பு போன்ற தோற்றம் கொண்ட பாம்பு திடீரென உட்புகுந்துள்ளது.

நேற்று முன் தினம் மதியம் இந்த அலுவலகத்துக்குள் உட்புகுந்த சுமார் 7 அடி கொண்ட பாம்பினால் அங்கு பணியாற்றிய உத்தியோகத்தர்கள் பதற்றமடைந்தனர். பின்னர் பாதுகாப்பு கருதி அந்தப் பாம்பு அடித்து கொல்லப்பட்டது. (ஐ)



## புலனாய்வுப் பிரிவு தலைவராக முஸ்லிம் ஒருவரை நியமிப்பதா?

### சரத் பொன்சேகா கண்டனம்



கொழும்பு, ஜன. 09

நாட்டில் முஸ்லிம் பயங்கரவாதம் தொடர்பாக அச்சம் நிலவுகின்றபோது, முஸ்லிம் ஒருவரைப் புலனாய்வுப் பிரிவின் முக்கிய பொறுப்பில் நியமித்த அரசின் செயற்பாட்டைக் கண்டித்துள்ளார் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான நாடாளுமன்ற விவாதத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் அதிமுக்கியத்துவ கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அரசு கூறுகிறது. ஆனால் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரொருவர் நியமிக்கப்படாமல், பாதுகாப்பு பிரதி இராஜாங்க அமைச்சர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளமை நாட்டின் பாதுகாப்புக்கு நல்லதல்ல. நாட்டில் முஸ்லிம் பயங்கரவாதம் தொடர்பில் அச்சம் நிலவுகின்றபோது புலனாய்வுப் பிரிவின் முக்கிய பதவியில் முஸ்லிம் ஒருவரை அரசு நியமித்துள்ளது. இது தவறான விடயம்.

புலிகளுடன் நாம் நடத்திய யுத்தத்தின்போது, தமிழர் ஒருவரை இதுபோன்று புலனாய்வுப் பிரிவின் முக்கிய பதவியில் நாம் நியமித்திருந்தால் யுத்தச் செயற்பாடுகளை வெற்றிகரமாகக் கையாள முடியாமல் போயிருக்கும். நிலைமை மாறியிருக்கும்.

எனவே, இவ்வாறான விடயங்களில் தவறிழைக்கக்கூடாது.

அதேபோல, கொள்கைப் பிரகடன உரையில் சிறுபான்மையினங்களின் ஆதரவில்லாமல் ஆட்சியமைக்க முடியுமென அவர் தெரிவிக்க முற்பட்ட கருத்து, நாட்டுக்குப் பொருத்தமானதல்ல. அத்தகையை வெளிப்பாடுகள் மீண்டும் நாட்டில் மோசமான விளைவுகளுக்கே காரணமாக அமையும்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில்– தமிழ் மக்கள் தம்மோடு இணைந்து செயற்பட வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

மறுபுறத்தில் சிறு பான்மையினரின் ஆதரவு தேவையில்லையென அவர் கூறுவது பொருத்தமற்றது – என்றார். (ஐ)

காட்டுத் தீ பாதிப்பு;

## ஆஸி. பிரதமருக்கு கோட்டா அனுதாபம்

கொழும்பு, ஜன. 09

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசனை நேற்றுமுன் தினம் தொலைபேசியில் அழைத்து ஆஸ்திரேலியாவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ குறித்து அனுதாபம் தெரிவித்துள்ளார்.

2004ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட சுனாமி, அடிக்கடி ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற ரீதியில் தற்போது ஆஸ்ரேலியாவில் ஏற்பட்டுள்ள அனர்த்தத்தால் அங்குள்ள மக்களின் வேதனைகளை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார்.



இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இலங்கை ஒரு தொகை தேயிலையை அன்பளிப்புச் செய்வதாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஆஸ்ரேலியா பிரதமர் ஸ்கொட் மொரிசனிடம் தெரிவித்துள்ளார். (ஐ)

## ஷானிக்கு எதிரான விசாரணை; 2 வாரங்களுள் அறிக்கை கோரல்

கொழும்பு, ஜன. 09

பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணை அறிக்கையை 2 வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் சீ.டீ.விக்கிரமரத்னவுக்கு, பொலிஸ் ஆணைக்குழுத உத்தரவிட்டுள்ளது.

பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள ஷானி அபேசேகர தொலைபேசி உரையாடல் மூலம் இலங்கை பொலிஸ் சேவையை அபகீர்த்திக்கு உள்ளாக்கியமை தொடர்பிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

## ஷானி வெளிநாடு செல்லத் தடை!

கொழும்பு, ஜன. 09

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கு வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நுகேகொடை நீதிமன்றம் இந்தத் தடையை விதித்தது.

புதிய அரசு பதவிக்கு வந்ததும், முதல் நடவடிக்கையாக அவரை பதவியிலிருந்து தூக்கி எறிந்திருந்தது.



நேற்று முன் தினம் அவர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட நிலையில், நேற்று அவர் வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை விதித்துள்ளது. (ஐ)

## துமிந்த சில்வாவின் வழக்கை மீள விசாரிக்க வேண்டுமாம்!

கொழும்பு, ஜன. 09

ரஞ்சன் ராமநாயக்க, முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் பத்மினி ரணவக்க மற்றும் முன்னாள் சி.ஐ.டி. இயக்குநர் ஷானி அபேசேகர ஆகியோருக்கு இடையிலான உரையாடல்களின் ஒலிப்பதிவு வெளியானதைத் தொடர்ந்து, கொலைக் குற்றவாளி துமிந்த சில்வாவின் வழக்கை மீள விசா ரிக்கவேண்டுமென இராஜாங்க அமைச்சர் ரோஷன் ரணசிங்க தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

துமிந்த தீமை மற்றும் பழிவாங்கும் காரணங்களுக்காக முற்றிலும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்பதை ஒலிப்பதிவுகள் காட்டுகின்றன. அவர் நான்கு ஆண்டுகளாகச் சிறையில் உள்ளார். தீர்ப்பை நீங்கள் ஆராய்ந்தால், ஒரு நீதிபதி சந்தேக நபர்கள் அனைவரையும் விடுவித்துள்ளார். அதே நேரத்தில் நீதியரசர் பத்மினி ரணவக்க மரண தண்டனை விதித்துள்ளார். ரணவக்க மற்றும் அபேசேகரவுடனான தொலைபேசி உரையாடல்கள் வெளியாகியுள்ளதன் அடிப்படையில், அவர்களின் தொழில் வாழ்க்கையில் பதவி உயர்வு பெறுவதற்காக அந்தத் தீர்ப்பு அரசியல் ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றதா என்பதில் சந்தேகம் உள்ளது.

கடந்த நான்கரை ஆண்டுகளில், நீதித்துறை அமைப்புடன் இணைக்கப்பட்ட அனைத்து நிறுவனங்களும் தங்களது குட்டி அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப அவற்றைக் கையாண்ட தந்திரமான அரசியல்வாதிகளின் பூனையாக மாறியது. இதனால் இந்த நிறுவனங்கள் நம்பகத்தன்மையை இழக்கின்றன.



ஷானி அபேசேகர, ரஞ்சன் ராமநாயக்கவிடம் மன்றாடியது முழு சி.ஐ.டியையும் இழிவுபடுத்தியுள்ளது. முன்னாள் சொலிசிட்டர் ஜெனரல் சுகத அளித்த ஆதாரங்களின்படி, சட்டமா அதிபர் துறையும் மிகவும் அரசியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

முன்னைய ஆட்சியின்போது நீதித்துறை ஊழல் நிறைந்ததாக இருந்தது என்று ரஞ்சன் ராமநாயக்க கூறியபோது, அந்த நேரத்தில் நீதியரசர் பத்மினி ரணவக்கவின் ஒலிப்பதிவு அவரிடம் இருந்ததா என்பது எங்களுக்குத் தெரியாது. உலகத் தரவரிசையில், 2015 க்கு முன்னர் சுதந்திரம் மற்றும் நீதித்துறையின் சுதந்திரத்தின் அடிப்படையில் இலங்கை 40 ஆவது இடத்தில் இருந்தது. ஆனால், இப்போது 70ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதுவரை ஒரு சில ஒலிப்பதிவுகள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதிகமான நாடாக்களை மீட்டெடுக்க முடிந்தால், கடந்த நான்கரை ஆண்டுகளில் இதுபோன்ற பழிவாங்கலில் முந்தைய அரசு எவ்வாறு செயல்பட்டது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும் –என்றார்.

# இலங்கையை வீழ்த்தி இந்தியா அபார வெற்றி

இலங்கை அணிக்கு எதிராக இரண்டாவது ரி – 20 போட்டியில் இந்திய அணி ஏழு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ரி – 20 கிரிக்கெட் போட்டி மத்திய பிரதேசத்தில் உள்ள இந்தூரில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 142 ஓட்டங்களை எடுத்தது.

அதிகபட்சமாக குசல் பெரேரா 28 பந்துகளில் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இந்திய அணி சார்பில் பந்துவீச்சில் ஷர்துல் தாகூர் 3 விக்கெட்டுக்களையும் நவ்தீப் சைனி, குல்தீப் யாதவ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.




பின்னர் 143 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி, 17.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 144 ஓட்டங்களை எடுத்து அபார வெற்றி பெற்றது.

இந்திய அணி சார்பில் கே.எல்.ராகுல் 45 ஓட்டங்களையும், ஸ்ரேயாஸ் அய்யர் 34 ஓட்டங்களையும், தவான் 32 ஓட்டங்களையும், கோஹ்லி ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கைப் பந்துவீச்சில், வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுக்களையும், லஹிரு குமார 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக அபாரமாகப் பந்துவீசிய நவ்தீப் சைனி தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வெற்றியுடன் மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரில் இந்திய அணி 1 – 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியுமான ரி – 20 போட்டி நாளை 10 ஆம் திகதி புனேவில் இடம்பெறவுள்ளது.

# இங்கிலாந்து அபார வெற்றி



இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்கஅணிகளுக்குஇடையே கேப் ரவுனில் இடம் பெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 189 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதன் படி அந்த அணி, முதல் இன்னிங்ஸிற்காக 269 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி தென்னாபிரிக்க அணி 223 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதனால், 46 ஓட்டங்கள் முன்னிலையுடன் இங்கிலாந்து இரண்டாவது இன்னிங்சை தொடங்கியது. பென் ஸ்டோக்ஸ் 47 பந்தில் 7 பவுண்டரி, 3 சிக்சருடன் 72 ஓட்டங்கள் விளாச, சிப்லி ஆட்டமிழக்காமல் 133 ஓட்டங்களும் அடிக்க இங்கிலாந்து அணி 8 விக்கெட் இழப்பிற்கு 391 ஓட்டங்கள் குவித்திருந்த நிலையில் இரண்டாவது இன்னிங்சை நிறுத்திக் கொண்டது.

இதனால் தென்னாபிரிக்க அணிக்கு 438 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

கடினமான இலக்குடன் இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்க அணியில், பீற்றர் மாலன், டீன் எல்கர் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

இருவரும் பொறுமையாக விளையாடினர். 40.6 ஓவரில் தான் அந்த அணி 100 ஓட்டங்களைத் தொட்டது. டீன் எல்கர் 78 பந்துகளில் 34 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து பீற்றர் மாலன் உடன் ஹம்சா ஜோடி சேர்ந்தார். இவரும் முடிந்த அளவிற்கு பந்துகளை எதிர்கொண்டார்.

பீட்டர் மாலன் 144 பந்தில் அரைச்சதம் அடித்தார். 4 ஆவது நாள் ஆட்டம் முடிவதற்கு ஒரு ஓவர் மீதம் இருக்கையில் ஹம்சா 59 பந்தில் 18 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ‘நைட் வோட்ச்மேனாக’ மகாராஜ் களம் இறங்கினார். 4 ஆவது நாள் ஆட்ட முடிவில் தென்னாபிரிக்கா 56 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 126 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பீற்றர் மாலன் 63 ஓட்டங்களுடனும், மகாராஜ் 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று முன் தினம் கடைசி நாள் ஆட்டத்தில் மகாராஜ் 2 ஓட்டங்களுடனேயே ஆட்டமிழந்தார். அடுத்து வந்த டு பிளிசிஸ் 19 ஓட்டங்களில் வெளியேறினார்.

5 ஆவது விக்கெட்டுக்காக மாலன் உடன் வான் ஷெடர் துஸ்சென் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி மிகப்பெரிய அளவில் தடுப்பாட்டத்தை கடைபிடித்தனர். ஆனால் 288 பந்துகளை சந்தித்து 84 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பீற்றர் மாலன் ஆட்டமிழந்தார்.

அதன்பின் தென்னாபிரிக்காவின் பாதுகாப்பு ஆட்டத்தில் தடை ஏற்பட்டது. துஸ்சென் 140 பந்தில் 17 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பிரோட் பந்தில் ஆட்டமிழந்தார். டி காக் 107 பந்தில் 50 ஓட்டங்கள் சேர்த்து வெளியேறினார்.

பென் ஸ்டோக்ஸ் கடைசி மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்த தென்னாபிரிக்கா 137.4 ஓவர்களை எதிர்கொண்டு 248 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதனால் 189 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அபார வெற்றி பெற்றது. தென்னாபிரிக்கா இரண்டாவது இன்னிங்ஸில் 565 நிமிடங்கள் போராடியது.

தென்னாபிரிக்க அணியில் பென் ஸ்டோக்ஸ் 3 விக்கெட்டுக்களையும் ஜேம்ஸ் அண்டர்சன், டென்லி தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 1 – 1 என சமநிலையில் உள்ளது. மூன்றாவது டெஸ்ட் போர்ட் எலிசபெத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

# பேர்த் ஸ்கொர்சர்ஸ் வெற்றி!

பிக் பேஷ் ரி – 20 தொடரின் 26ஆவது லீக் போட்டியில், பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணி ஆறு விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

கீலோங் மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற இப்போட்டியில், மெல்போர்ன் ரெனிகேட்ஸ் அணியும், பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மெல்போர்ன் ரெனிகேட்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய மெல்போர்ன் ரெனிகேட்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 175 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சேம் ஹார்பர் 73 ஓட்டங்களையும், வெப்ஸ்டர் 59 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பேர்த் ஸ்கொர்சர்ஸ் அணியின் பந்துவீச்சில், ஜெய் ரிச்சட்சன் 3 விக்கெட்டுகளையும், மிட்செல் மார்ஷ் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 176 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பேர்த் ஸ்கொர்சர்ஸ் அணி, 19 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை கடந்தது. இதனால் பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணி ஆறு விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, லியம் லிவிங்ஸ்டன் 59 ஓட்டங்களையும், ஜோஸ் இங்லீஷ் 51 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மெல்போர்ன் ரெனிகேட்ஸ் அணியின் பந்துவீச்சில், ரிச்சர்ட் க்ளீசன் ஆகியோர் 3 விக்கெட்டுகளையும், கேன் ரிச்சட்சன் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 39 பந்துகளில் 4 சிக்ஸர்கள் 3 பவுண்ரிகள் அடங்களாக 59 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட லியம் லிவிங்ஸ்டன் தெரிவுசெய்யப்பட்டார்.




# காதலியின் குடும்பத்தினருடன் முதன் முதலில் ஹர்திக் பாண்ட்யா

இந்திய அணியின் சகலதுறை வீரர் ஹர்திக் பாண்ட்யா காதலியின் குடும்பத்தினரை ஹோட்டல் ஒன்றில் சந்தித்த புகைப்படம் ஒன்று சமூகவலைத் தளங்களில் வைரலாகி வருகிறது.

இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடருக்கு பின், அந்தளவுக்கு எந்த ஒரு தொடரிலும் விளையாடாத ஹர்திக் பாண்ட்யா, திடீரென்று நடிகையான நட்டாா ஸ்டேன்கோவிக் என்பவரை காதலிக்கிறார் எனவும், அவரை நிச்சயதார்த்தம் செய்து கொண்டார் எனவும் கூறி அவருடன் இருக்கும் புகைப்படம் மற்றும் வீடியோவை வெளியிட்டார்.

இந்த புகைப்படம் சமூகவலைத்தளங்களில் வைரலான நிலையில், தற்போது ஹர்திக் பாண்ட்யா காதலியின் குடும்பத்தினரை மும்பையில் இருக்கும் ஹோட்டல் ஒன்றில் சந்தித்து பேசியுள்ளார்.

நிச்சயார்த்தத்தை ஹர்திக் பாண்ட்யா ஆச்சரியம் தரும் விதத்தில் செய்துவிட்டதால், அவரின் கல்யாணம் பிரம்மாண மாக இருக்குமா? அல்லது இதுவும் ஒரு ஆச்சரியமாக இருக்குமா? என்ற கேள்வியை ரசிகர்கள் எழுப்பி வருகின்றனர்.



## சுமந்திரன் எம்.பியை கொல்லச் சதி;

# கைதான போராளிகளை விடுவிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 09

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைக் கொலை செய்ய முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமது உறவுகளை விடுதலை செய்து தருமாறு அவர்களின் உறவினர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

2016 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுமந்திரனைக் கொலை செய்ய முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கிளிநொச்சி மற்றும் வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று பகுதியைச் சேர்ந்த முன்னாள் போராளிகள் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

வழக்கு தொடுக்கப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டவர்கள் 2017 ஆம் ஆண்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டு மீண்டும் 2018ஆம் ஆண்டு விசாரணை எனக் கூறி அழைக்கப்பட்டு கைது செய்யப்பட்டு தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஏனைய நால்வரும் தற்போதும் வழக்குத் தொடரப்பட்ட நிலையில் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் போராளிகளின் குடும்பத்தினர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெலிக்கடை மற்றும் அனுராதபுரம் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு பேரும் விடுதலை செய்வதற்கு நாட்டின் ஜனாதிபதி மற்றும் தற்போதைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுள்ளனர். (ஐ – 07)

# வளிமண்டலத்தில் பிளாஸ்ரிக் துகள்

## மக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 09

கொழும்பு மற்றும் கண்டி உள்ளிட்ட நகரங்களில் வளிமண்டலத்தில் மைக்ரோ பிளாஸ்ரிக் துகள் படிமங்களின் செறிவு அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராதனைப்பல்கலைக்கழகத்தினால்மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் தொடர்பாகக் கண்டறியப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, பட்டப்படிப்புக்கான கற்கை நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பிட்டவல இந்த விடயம் குறித்து தெளிவுபடுத்தியுள்ளார்.

மைக்ரோ பிளாஸ்டிக் துகள் படிமங்களின் செறிவு அதிகரிப்பதால் பாரிய சிக்கல்களை எதிர்நோக்க நேரிடும் எனவும் பேராசிரியர் கூறியுள்ளார்.

மிக நுண்ணிய அளவில் இந்தத் துகள்கள் காணப்படுவதால், சில சந்தர்ப்பங்களில் அவை சுவாசத்தினூடாக உட்செல்லக்கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மைக்ரோ பிளாஸ்ரிக் துகள் படிமங்களின் செறிவு அதிகரிப்பதால் வளிமண்டலம் பாதிப்புக்குள்ளாகுவதுடன், நோய்த்தாக்கங்களும் ஏற்படக்கூடும் எனப் பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கடந்த இரு வாரங்களாகக் கொழும்பு நகர வளிமண்டலத்தில் தூசுக்களின் செறிவு அதிகரித்துள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் அறிவித்துள்ளது. (ஐ)

# வவுனியாவில் இளைஞர் சடலமாகக் கண்டெடுப்பு

வவுனியா, ஜன. 09

வவுனியா - செட்டிகுளம் மனிக்பாம் பகுதியில் நேற்று அதிகாலை இளைஞர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

செட்டிகுளம் மனிக்பாம் பகுதியில் உள்ள பிரதான வீதிக்கு முன்பாக இளைஞர் ஒருவரின் சடலம் வீதியில் காணப்பட்டமை தொடர்பாக பறயனாலங்குளம் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவத்தில் மனிக்பாம் பகுதியைச் சேர்ந்த பா.நிரோஜன் (வயது - 35) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார் எனவும், அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த நபரின் சடலம் செட்டிகுளம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அந்த நபரை வீதியால் பயணித்த வாகனங்கள் மோதிவிட்டு தப்பிச் சென்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளமையுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# துமிந்த சில்வாவை விடுவிக்க ஏற்பாடு

## ஹிருணிகா கூறுகிறார்



கொழும்பு, ஜன. 09

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள துமிந்த சில்வாவை விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிறேமச்சந்திர குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

என் தந்தை பாரத லக்ஷ்மன் கொலையில் சம் பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு ஏற்கனவே மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ரஞ்சன் ராமநாயக்கவின் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் இறுவட்டில் ஷானி அபேசேகர, வழக்கில் என்ன நடந்தது என்பதைக் கூறியிருக்கிறார்.

இதனை வைத்துக்கொண்டு அபேசேகரவை விசாரணை மேற்கொள்ள வேண்டிய வழிகளை ரஞ்சன் ராமநாயக்க அவரிடம் கூறவில்லை.

அதேவேளை மேல் நீதிமன்ற நீதிபதி பத்மினி ரணவக்கவுடன், ரஞ்சன் ராமநாயக்க மேற்கொண்ட தொலைபேசி கலந்துரையாடலை வைத்துக்கொண்டு துமிந்த சில்வாவுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்று ஊடகங்கள் கூறுவது அபத்தமானது.

இவை யாவும் பொதுத்தேர்தலுக்கு முன்னர் துமிந்த சில்வாவைப் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கும் முயற்சிகளாக உள்ளன. எனினும் நாட்டின் மக்கள் இதற்கு உரிய பாடத்தைப் புகட்டுவர்.

அதேபோன்று மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன போன்றவர்கள் கடந்த காலத்தில் துமிந்த சில்வாவை போதைப்பொருள் விற்பனைக்காரன் என்று மிகமோசமாக விமர்சித்ததுடன் மாத்திரமல்லாமல், கொழும்பில் மஹிந்தவின் நீலக் கொடியை ஏற்றுவதற்கு எனது தந்தை மாத்திரமே இருந்தார் என்றும் பாராட்டியிருக்கிறார்கள்.

ஆனால் தற்போது அவர்களே துமிந்த சில்வா நல்லவர் என்றும், எனது கோரிக்கைகளுக்கு அமைவாகவே அவர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றார் எனவும் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது – என்றார். (ஐ)






# ரஞ்சனின் குரல் ஒலிப்பதிவுகள் குறித்து விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜன. 09

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் சர்ச்சைக்குரிய குரல் தொலைபேசி அழைப்புகள் தொடர்பாக விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன.

கொழும்பு குற்றப்பிரிவு இந்த விசாரணையை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

குரல்கள் மற்றும் அவற்றின் உள்ளடக்கங்கள் தொடர்பாக விசாரிக்கப் படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மற்றும் குற்றவியல் புலனாய்வுத் துறையின் முன்னாள் இயக்குநர் ஷானி அபேசேகர ஆகியோருக்கு இடையே பரபரப்பான உரையாடல் நடந்துள்ளது.

இந்தச் சம்பவத்தின் அடிப்படையில் ஷானி அபேசேகராவை இடைநீக்கம் செய்யத் தேசிய பொலிஸ் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிள்ளையானின் மறியல் நீடிப்பு!



மட்டக்களப்பு, ஜன. 09

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திகாந்தனை (பிள்ளையான்) எதிர்வரும் ஜனவரி 22ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி எம்.வை.எம். இஸ்ஸதீன் உத்தரவிட்டார்.

பிள்ளையான் மீதான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

2005ஆம் ஆண்டு, மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் ஆராதனையில் ஈடுபட்டிருந்த மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கில் பிள்ளையான் உட்பட நால்வர் விளக்க மறியிலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நீதிமன்ற சுயாதீனத்தன்மை இல்லாமலாக்கப்பட்டுள்ளது

## கடந்த அரசைச் சாடுகிறார் நாமல்



கொழும்பு, ஜன. 09

நீதிமன்ற சுயாதீனத்தன்மை கடந்த அரசால் முற்றாக இல்லாமலாக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நீதிமன்ற சுயாதீனம் தொடர்பாக இவர்கள் கதைக்கின்றனர். தற்போது ரஞ்சன் ராமநாயக்கவின் தொலைபேசி உரையாடல்தொடர்பான ஒலிப்பதிவுகள்வெளியாகியுள்ளன.

பொலிஸ் அதிகாரிகள், நீதிபதிகள் ஆகியோருடன் கதைக்கின்றனர். நீதித்துறையில் தலையிடவேண்டாம், அவர்களைச் சுயாதீனமாகச் செயற்பட இடமளியுங்கள் என அன்று நாங்கள் கோரிக்கை விடுத்தோம்.

சட்டவிரோத நிறுனங்களை அமைத்து அரசியல் பழிவாங்கல்களைச் செய்யவேண்டாமெனக் கேட்டுக்கொண்டோம். ஆனால் இதற்கு செவிசாய்க்கவில்லை.

ஆனால் இவர்கள் செய்த தவறுகளுக்கு இப்போது கைது செய்யப்படும்போது அதனை எதிர்க்கின்றனர்.

அன்று அப்படி செய்தவர்களே இன்று நீதித்துறை சுயாதீனம் தொடர்பாக கதைக்கின்றார்கள். இவர்களால் நீதிமன்றம் மற்றும் நீதித்துறை மீதான நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

எவ்வாறாயினும் நாங்கள் நீதிமன்றம் மற்றும் நீதித்துறை மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கையெடுப்போம்.

அன்று பொலிஸ் அதிகாரியுடன் தொலைபேசியில் உரையாடியோரை கைது செய்ய வேண்டும். என்ன செய்ய வேண்டும் என்றெல்லாம் உத்தரவிட்டுள்ளனர்.

நீதிக்கட்டமைப்புக்கு செய்த அபகீர்த்தியிலிருந்து இவர்களால் தப்பிக்க முடியாது. இப்போதாவது நீதித்துறை சுயாதீனமாகச் செயற்பட இடமளியுங்கள் எனக் கேட்கின்றோம்.

அத்துடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்வைத்துள்ள வேலைத்திட்டம் 100 நாள்களுக்கல்ல. 5 வருட வேலைத்திட்டமாகும். அதனை நடைமுறைப்படுத்துவதே எமது இலக்காகும்.

அதற்காகவே நாங்கள் அதிகாரத்துக்கு வந்திருக்கின்றோம். மாறாக யாரையும் பழிவாங்கும் வேலைத்திட்டம் எம்மிடமில்லை.

நாங்கள் ஆட்சிக்கு வந்தது மக்களுக்கு வேலை செய்வதற்கவே அன்றி பழிவாங்குவதற்காக அல்ல என்பதனை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் – என்றார். (ஐ)


விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத்தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுத்துப்பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.

THE SASIKA LEARNERS

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.



வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

சசிகா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

தலைமைக் காரியாலயம், இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOTLINE: 077 722 6247
0212217678,
0776140361
sasika Learners
sasika driving Schoolgmail.com.

கிளை நிறுவனங்கள்:

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
0212215472
0703013012

கே.கே.எஸ். வீதி, மல்லாகம்
021224 3393
0703013014

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021225 1664
0703013016

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
0212215472
0703013012

காரைநகர்
021 225 2454,
070 510 2484

பண்டத்தரிப்பு
021 225 2333,
071 255 4135

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

# கோட்டாவுக்கு வாக்களிக்காதோர் கூட இப்போது அவருக்கு பூரண ஆதரவாம்!

## கூறுகின்றார் டலஸ் அழகப்பெரும

கொழும்பு, ஜன. 09

ஜனாதிபதியின் செயற்பாடுகளைக் கண்டு, இன்று அவருக்கு வாக்களிக்காதவர்கள்கூட ஆதரவை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்று ஒட்டுமொத்த நாடும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஏற்றுக்கொண்டுள்ளது.

அவருக்கு வாக்களித்தவர்களுடன், வாக்களிக்காதவர்களும் இவ்வாறான ஒரு தலைவர் நாட்டுக்குக் கிடைத்தமையை இட்டு மகிழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள்.

அரச தலைவர் ஒருவர் மிகவும் சாதாரணமாக இருக்கிறார். அவர் நாடாளுமன்றுக்கும் இரண்டு வாகனங்களில்தான் வந்தார்.

ஆனால், முன்னாள் தலைவர்கள் அனைவரும் நாடாளுமன்றுக்கு வரும்போது குதிரைப்படை புடை சூழ, வாகன அணிவகுப்பில்தான் வந்தார்கள். நவம்பர் 16 ஆம் திகதிக்கு முன்னர் இந்த நிலைமை இருக்கவில்லை. இந்த 7 வாரங்களில் எல்லாம் மாறிவிட்டது.



இந்தக் காலத்தில் பாதாளக் குழுக்கள் எங்கு போனது என்றுக்கூடத் தெரியவில்லை. இந்தப் பயணத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டுமெனில், எமக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலம் கிடைக்க வேண்டும் – என்றார். (ஐ)

# சிங்கப்பூர் அமைச்சர் மஹிந்தவுடன் பேச்சு





கொழும்பு, ஜன. 09

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சிங்கப்பூர் உள்நாட்டு விவகார அமைச்சர் கே.சண்முகம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துள்ளார்.

நேற்று முன் தினம் காலை இலங்கையை வந்தடைந்த அமைச்சர் கே.சண்முகம், அலரி மாளிகையில் வைத்து பிரதமரைச் சந்தித்துப் பேசினார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவது உள்ளிட்ட விடயங்கள் இதன்போது பேசப்பட்டுள்ளன. (ஐ)

# பண்டாரநாயக்க சிலைக்கு மைத்திரிபால மலர் அஞ்சலி



கொழும்பு, ஜன. 09

முன்னாள் பிரதமர் அமரர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் பிறந்த தின நிகழ்வு நேற்றுக் காலை காலி முகத்திடலில் அமைந்துள்ள அன்னாரது உருவச் சிலைக்கு அருகில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)



# சந்திரிகாவை தவிர்த்த சு.க.!



கொழும்பு, ஜன. 09

சுதந்திரக்கட்சியின் நிறுவுநர் பண்டாரநாயக்கவின் பிறந்ததின நிகழ்வைத் தன்னை அழைக்காமல் சு.க. நடத்தியுள்ளது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றம்சாட்டியுள்ளார்.

பண்டாரநாயக்கவின் 121ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு காலி முகத்திடலிலுள்ள பண்டாரநாயக்கவின் சிலையின் முன்பாக நேற்று சந்திரிகா, சுனேத்ரா ஆகியோர் மலர் தூவி வணக்கம் செலுத்தினர்.

சந்திரிகா பண்டாரநாயக்க அங்கு வருவதற்கு முன்னதாகவே, காலை 8.30 மணியளவில் சுதந்திரக் கட்சியினர் அங்கு அஞ்சலி செலுத்திவிட்டு சென்றுவிட்டனர். அவர்கள் வைத்த பூச்செண்டு அங்கிருந்தது.

ஒவ்வொரு வருடமும் தந்தையின் பிறந்த தின நிகழ்வை நினைவு கூர்வதாகவும், எனினும் இம்முறை தன்னை அழைக்காமல் சு.கவினர் அஞ்சலி செலுத்தியுள்ளனர் எனவும் சந்திரிகா தெரிவித்தார். (ஐ)

# உணவு விடுதிக்குள் புகுந்து பணியாளர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன. 09

யாழ்.பண்ணையில் அமைந்துள்ள உணவு விடுதியில் இனந்தெரியாத குழுவினர் மேற்கொண்ட தாக்குதலில் உணவகப் பணியாளர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன் தினம் இரவு 11.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

மூடப்பட்டிருந்த விடுதிக்குள் புகுந்த இனந்தெரியாத கும்பல், பணம் வைக்கும் இடத்தைக் கேட்டே இவ்வாறு தாக்குதல் மேற்கொண்டதாகப் பணியாளர் தெரிவித்தார்.

அத்தோடு, ஐஸ்கிறீம் தருமாறு கேட்டும் அவரை அவர்கள் தாக்கியுள்ளனர். சம்பவம் தொடர்பான சி.சி.ரி.வி. காணொளி வெளியாகியுள்ளது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

## காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் – மார்கழித் திருவாதிரை உற்சவ

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் –09.01.2020

திருமுகம் கண்டுநாம் பெறும் சுகம் கோடி
தேரையே எம்விழி நோக்கும் - ஐயன்
வரும்வழி எங்கிலும் நறுமலர் பூத்திட
வாஞ்சையாய் அலைகளும் பூக்கும்.
திருத்தலம் அதிர்ந்திட தவில்நாதஸ் வரமும்
பறையொடு உடுக்கையும் முழங்கும் - ஈசன்
அருளிடம் எப்பவும் நிழலிடம் போலவே
அடியவர்க் கென்றும் விளங்கும்.










கசூரினா படகுச் சேவை தொடர்புகளுக்கு: 077 833 9303, 077 078 3949, 077 355 7959
Email : Kasurina.boat@gmail.com